Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழூர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 21 (26.12.2002) வியாழக்கிழமை இதழ் : 86




# பாதுகாப்பு வலயங்களுக்குத் தீர்வு காணாமல் வேறு விடயங்களை முன்னிலைப்படுத்த முடியாது!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பேட்டி



(கிளிநொச்சி)

எதிர்வரும் ஆறாம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் உயர் பாதுகாப்புப் பிரதேசம் தொடர்பாகவே பேசவுள்ளோம். இதைவிட்டு வேறு எதையும் பேச்சுக்களில் இப்போது முன்னிலைப்படுத்த முடியாது என அரசியற் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் வைத்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உயர் பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறுவது மக்கள் வாழ்ந்த பிரதேசம். அவர்கள் இயல்பு வாழ்விற்கு திரும்பி சுதந்திரமாக வாழ வேண்டுமென்றால், இயல்பு வாழ்வு நடைமுறைக்கு வரவேண்டும். ஆகவே, இது தொடர்பாக அரசு அக்கறையுடன் செயற்பட வேண்டும். இதில் நாம் மக்களுடைய பக்கமே பார்ப்போம். உயர் பாதுகாப்பு வலயமென்று மக்களின் இயல்பு வாழ்விற்கு தடையாக இருப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அரசாங்கம் இதனைச் சீர்படுத்தி மக்களின் சுதந்திரத்திற்கு தடையாக இருப்பதை, தவிர்ப்பது நல்லதென்றே கருதுகின்றேன்.

இது மக்களுடைய பிரச்சினை. உடன்படிக்கை மூலம் - அமைதி, சமாதான சூழ்நிலையிலும் மக்களிற்கு இருக்கும் இராணுவ நெருக்குவாரங்களைத் தணித்து, அவர்கள் சுதந்திரமாக தங்களுடைய சொந்த இடங்களிலே சென்று, மீண்டும் அவர்களின் வாழ்வு, இயல்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மீள்குடியமர்வைத் தடுப்பது மனித உரிமை மீறும் செயல்

### விண்ணாணம் விநாசியார்



சனத்திட நிம்மதிதான் சமாதானத்தின்ர உறுதியெண்டது எப்ப உவயளுக்கு விளங்குமோ...!

## அரசாங்கத்தை வலியுறுத்துகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

(நமது நிருபர்)

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமது சொந்த இடங்களுக்கு மக்கள் திரும்பிச் செல்வதைத் தடுப்பதும் மனித உரிமை மீறலே என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அரசாங்கத்திற்கு பல சிபார்சுகள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைத்துள்ளது.

## இந்திய - இலங்கை கடற்படை கூட்டு நடவடிக்கைக்கு ஆராய்வு

(கொழும்பு)

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இந்தியாவுக்கு நேற்று பயணமாகியுள்ளார். இவர், அங்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் மற்றும் இந்திய இராணுவ, கடற்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

கடலோரக்காவல் மற்றும் அண்மையில் இலங்கையின் கிழக்குப்பகுதிக்கு வந்து சென்ற, மர்மக்கப்பல் போன்றவை தொடர்பாக, இவர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கும் சுயாட்சி வேண்டும்

### மு.கா.அதாவுல்லா அணி தீர்மானம்

வடக்கு கிழக்கை இணைத்து தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான தீர்வோ அல்லது வேறு எந்தத் தீர்வோ வழங்கப்படும்போது, இப்பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுக்கென தனியான சுயாட்சி வழங்கப்படவேண்டும் என நேற்று அக்கரைப்பற்றில் பிரதி அமைச்சர் அதாவுல்லா அணியினர் நடத்திய முஸ்லிம் காங்கிரசின் 18 வது வருடாந்த பேராளர் மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் அதாவுல்லா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புராதன சின்னங்கள் கொக்காவிலில் மீட்பு

(நமது நிருபர்)

கொக்காவிலில் ஏ-9 வீதிப் புனரமைப்புக்காக மண் தோண்டியபோது ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முந்திய புராதனமான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

வதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மண் அகழ்ந்தபோது கொக்காவிலில் இப்புதைபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. பழைய மட்பாண்டப் பொருட்கள், உலோகத்துண்டுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இதனை மீட்டெடுத்துள்ள துறைசார் வல்லுனர்கள், அவற்றை தமிழீழக் கல்விக்கழகத்திடம் ஒப்படைத்துள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழப்பை ஏற்படுத்தும் காய்ச்சல்; டெங்கு இன வைரஸே காரணம்!

### யாழ்.வைத்தியசாலை பதிற்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அதிகரித்துவரும் காய்ச்சலை இனங்கண்டு கொள்ளமுடியாது உள்ளது. இதனால் உரிய சிகிச்சை அளிக்கமுடியாதுள்ளதால், உயிரிழப்பைத் தடுப்பதும் சிரமமாயுள்ளது. ஒருவகை டெங்கு வைரஸ் இனத்தின் தாக்கமே இக் காய்ச்சலுக்கான காரணம் எனக் கருதமுடிகிறது.

இவ்வாறு- யாழ்.போதனா வைத்தியசாலைப் பதிற்பணிப்பாளர் இகணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் பரவிவரும் காய்ச்சலினால் தினமும் உயிர் இழப்புக்கள் அதிகரித்து வருவது தொடர்பாக எமது செய்தியாளர் அவரிடம் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

குடாநாட்டில் அண்மைக் காலமாக இனந்தெரியாத காய்ச்சல் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு அனுமதிக்கப்படும் நோயாளர்களின் உடலில் சடுதியான பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

மூக்கு, வாய்ப்பகுதியில் குருதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காய்ச்சல் பீடித்த இளம் யுவதி பலி

கடந்த ஆறு நாட்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார். கல்வியங்காட்டைச் சேர்ந்த, யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் மகளாகிய மகேந்திரம் சோபிதா (வயது 20) என்பவரே மரணமானவர்.

இவர் கடந்த மூன்று நாட்களாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், அது பயனளிக்காத நிலையில் மரணமடைந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நிதிப்பற்றாக்குறை, நிர்வாகக் குளறுபடி திருமலை வளாகத்தைப் பாதித்துள்ளன!

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை )

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் இரண்டு பிரச்சனைகள் உள்ளன. முதலாவது, அரசாங்கம் தமிழ்ப் பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப் படும் நிதிக்குறைவால் ஏற்படும் பற்றாக்குறை, மற்றையது கிழக்குப் பல் கலைக்கழகத்தின் நிர்வாகிகள் விடும் தவறுகள் என, தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்பொறுப்பாளர் சி.திலக் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாக அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் ஒன்று திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. திருகோணமலை வளாகத்திற்கு நிதிகள் ஒதுக்கப்படாமை காரணமாக பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. இதன் காரணமாக இவ்வளாகம் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் முகமாக நடததப்படட் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அரசியற்பொறுப்பாளர் திலக் மேலும் உரையாற்றுகையில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணினிப்பிரிவு எரியுண்டபோது அதனை மீள அமைப்பதற்காக, நிறுவனம் ஒன்று 10 மில்லியன் ரூபாய்களை வழங்கமுடியுமாயின், ஏன் திருகோணமலை வளாகத்திற்கு நிதிகளை நிறுவனங்களின் துணையுடன் பெற்றுக்கொள்ள முடியாது இருக்கின்றது.

நாட்டின் பெரும்பான்மையான இடங்களில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்போது- வடக்கு கிழக்கு பகுதிகளில் பாடசாலைகளே பல்கலைக்கழகங்களாக மாற்றப்படுகின்றன. கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு போதுமான நிதி கிடைக்கின்றது. அதனை வளாகங்களுக்கு பங்கிடுவதிலேயே பிரச்சினைகள் தோன்றுகின்றன என்றார்.

தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் உரையாற்றுகையில், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கைகொடுத்து உதவ வேண்டிய பொறுப்பு கல்விமான்களைச் சார்ந்தது. மாணவர்களின் கல்வியைப் புறக்கணிக்கும் உரிமை எமக்கு இல்லை. திருகோணமலை வளாகத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த அபிவிருத்திக் குழு, கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தரைச் சந்தித்து திருகோணமலை வளாகத்தின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாட வேண்டும் என்றார்.

திருகோணமலை வளாகத்தின் வேந்தர் வண. ஏ.சி.ராசேந்திரம் உரையாற்றுகையில்,பௌதீக தேவைக்காக 200 ஏக்கர் காணி கோணேசபுரம் என்னும் இடத்தில் 5 வருடங்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட போதும், இன்னும் எந்த விதமான கட்டடங்களும் அமைக்கப்படவில்லை. இந்த இடம் காட்டுயானைகள் வந்து உலாவும் இடமாகவே இருக்கினறது. திருகோணமலை வளாகத்தில், தொடர்பாடல் வணிகக் கல்வி, பிரயோக கணிதம் என்னும் இரண்டு பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதும், பயிற்சிநெறிகள் இன்னமும் தொடங்கவில்லை. 5 வருடங்களுக்கு முன்னர் சான்றிதழ் பயிற்சி நெறிகளாக நடத்தப்பட்டு, பின்னர் டிப்ளோமா பயிற்சி நெறியாக மாற்றம் பெற்று, பின்னர் பட்டப் பாட நெறிகள் நடத்தப்பட்டன. தற்போது இங்கு மீண்டும் சான்றிதழ் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.


நிறஞ்சனாஸ் சாங்கானை

11.00, 2.45, 6.00 (பு.நே)
சரத்குமார், நெப்போலியன்,
தேவயானி நடித்த
**தென்காசிப்பட்டணம்**
நாளை முதல் வெள்ளி, சனி, ஞாயிறு இரவு
8.45 (பு.நே)மட்டும் JACKION நடித்த
**SHAFT**
(சி/287)


## இன்றைய நாள் இனிய நாள்

**26-12-2002 - வியாழக்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, மார்கழி மீ, - 11ஆம் திகதி**

*திதி* :- அபரபட்ச ஸப்தமி அதன்மேல் அட்டமி.

*நட்சத்திரம்* :- உத்தரம் பின்னிரவு 3.32 வரை அதன் மேல் அத்தம்.

**மேடம்** :- தேகசுகம் நன்று, புதிய கடன் வசதி, எதிரி மௌனம் நண்பர்கள் உறவினர் மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமம்.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, பணவரவு குறைவு, புத்திரர் சுகக்குறைவு, வைத்தியச்செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தேகசுகக்குறைவு, மாதாசுகக்குறைவு, வைத்தியச்செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, தேவையற்ற செலவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, செய்தொழில் லாபம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**தனு** :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழிற்சிறப்பு, தெய்வ வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**மகரம்** :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, பிதாவுடன் மனஸ்தாபம், வைத்தியச்செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகக்குறைவு, தூரப்பிரயாணம் தவிர்க்கவும், புதிய ஒப்பந்தங்கள் எழுதுவது தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மீனம்** :- தேகசுகம் நன்று, சுற்றுலா மகிழ்வு, அறுசுவையுண்டி, ஆடையலங்கார மகிழ்வு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY (Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

**3 Years Diploma in**

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION*

**MUTHAYAMMAL POLYTECHNIC**
Rasipuram - 637 408, Namakkal Dt. T.N. India

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297 074-512468

# சமஷ்டித் தீர்வை பொ.ஐ.மு. நிராகரிப்பு; அரசு மீது ஜனாதிபதியின் அதிகாரம் பாயும்!

## சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமுல்படுத்த விருக்கும் சமஷ்டி ஆட்சி முறையை சிறீலங்கா சுதந்திரக்கட்சி முற்று முழுதாக எதிர்ப்பதாக, கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான மைத்திரி பால சிறிசேன உத்தியோகபூர்வ மாக அறிவித்துள்ளார்.

பொலனநறுவையில் இளைஞர் யுவதிகளின் ஒருங்கிணைப்புக் கூட் டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கு - கிழக்கில் தனியான இராணுவம், பொலிஸ், நீதிமன்றங் கள், வங்கிகள் இயங்கிவரும் நிலை யில் உத்தேச சமஷ்டி ஆட்சிமுறை எழுத்தளவில் மாத்திரமே இருக்கும். சுதந்திரக்கட்சி, நாட்டைத் துண்டா டும் இந்நடவடிக்கையை முற்று முழுதாக எதிர்க்கின்றது.

அரசாங்கம் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் தொடர்பாக, எதிர் காலத்தில் ஜனாதிபதி அதிகாரத் தைப் பயன்படுத்தலாம் என்றார். அத்துடன் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட சமஷ்டி தொடர்பான உடன்பாட்டை ஜனா திபதி சந்திரிகாவின் ஆலோசனை யின்பேரிலேயே தாம் உத்தியோக பூர்வமாக வெளியிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நிமால் கொலை சந்தேகநபர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட் டுள்ள சந்தேகநபர்கள் இருவரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான கந்தசாமி ஜெக தீஸ்வரன், காராளசிங்கம் சிந்துபரன் ஆகிய இருவரும் மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே இவ்வுத்தரவு வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான சந்தேக நபர் இருவரையும், ஜனவரி 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(ச)

## கூட்டமைப்பு எம்.பிக்களை தலைவர் பிரபா சந்திப்பார்!

### கூட்டமைப்பு வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் சந்திக்கவுள்ளனர். தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்னர் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய அரசியல்நிலை மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை விடயங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவா கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவாரென தெரிவிக்கப்படுகின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அரசாங்கம் தாமதிப்பதற்கான காரணம் குறித்தும் கூட்ட மைப்பினர், விடுதலைப் புலிகளின் தலைவருடன் கலந்துரையாடுவர் என்றும தெரியவருகின்றது.

## பொ.ஐ.முவினுள் முரண்பாடுகள் இல்லை; கட்சியைச் சீர்குலைக்க அரசாங்கம் சதி!

### மங்கள சமரவீர குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் எத்தகைய முரண்பாடுகளும் இல்லை யென, முன்னணியின் நாடா ளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் தெரி விக்கையில்,

ஜனாதிபதியைக் கொல்லுவதற்கு பொ.ஐ.மு. உறுப்பினர் ஒருவர் சதித்திட்டம் செய்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்தின் கட்டுக்கதை என்று குற்றம் சாட்டிய அவர், கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டங்கள் எதுவும் எமக் கிடையே இல்லையென்றும் மறுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரான மகிந்த ராஜபக்ஷவும் நானும்- எமது கட்சித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாராநாயக்காவை நேற்று முன்தினம் சந்தித்து பேசியிருந்தோம். எமக்கிடையே அவ்வாறு முரண்பாடுகள் இருக்குமானால், நாம் ஜனாதிபதியை சந்தித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து மகிந்த ராஜபகஷவை விலக்கி, அந்தப்பதவியில் அமருவதற்கு நான் முயற் சிப்பதாகச் சிலர் கதை கட்டுகிறார்கள்.

ஆதாரமற்ற பொய்யான தகவல்களை ஊடகங்க ளும் வெளியிடுகின்றன. அரசாங்கம் திட்டமிட்டுப் பிரதான தேசியக்கட்சி ஒன்றை சீர்குலைப்பதற்கு பல முயற்சி களை எடுத்து வருகின்றது. அவ்வாறன சதித்திட்டத்தற் குள் எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரும் அகப்பட்டுவிட மாட்டார்கள் என்று கூறிய மங்கள சமரவீர, அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற் கான கூட்டுத்தலைமை ஒன்றை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி ஈடுபட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

## புலிகளுக்கு சட்டவிரோதமாக வானொலிக் கருவிகள் நிருபிக்கப்பட்டால் அமைச்சர் பீரிஸ் பதவியிலிருந்து விலக வேண்டும்!

### தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

புலிகளுக்கு நவீன செயற்கைக் கோள் வானொலி உபகரணங்களை அனுமதித்தமை நிரூபிக்கப்பட்டால், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பதவி விலகவேண்டும் என மக்கள் ஐக் கிய முன்னணியின் தலைவரும், பொதுஜன ஐக்கிய முன்னணி நாடா ளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

'விசற்' எனப்படுகின்ற நவீன வானொலித் தகவல் சாதனத்தைப் புலிகள், கொழும்புத் துறைமுகம் ஊடாக இறக்குமதி செய்திருப்பதா கவும், இதற்கு நோர்வே தூதரகம் உதவி வழங்கியிருப்பது தொடர் பான சர்ச்சை குறித்து- அமைச்சர் பீரிஸ் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதில் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் கிடைத்த விடயத் தில் எந்த சட்டத்துக்கும் விரோத மான காரியங்களும் நடைபெற வில்லை என்றும், எல்லாமே அர சாங்கத்தின் அனுமதியுடன்தான் நடைபெற்றது எனவும் தெரிவித் திருந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரி வித்தபோதே- தினேஷ் குணவர்த் தன, இந்த விடயத்தில் அரசாங்கம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் துரோகம் செய்து விட்டதாகவும், புலிகளுக்கு வானொலி உபகரணங் கள் சட்டத்துக்கு புறம்பானவகை யில் கிடைத்திருப்பின் அந்தத் தேச விரோதச் செயலுக்காக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பதவியில் இருந்து விலகவேண்டும் என்றும் தெரிவித் துள்ளனர்.

### வரணியில் தென்னங்கன்று விநியோகம்

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு, யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் தென்னங்கன்றுகளை வழங்கியுள் ளது.

கடந்த வியாழக்கிழமை இடைக் குறிச்சி நவா சனசமூக நிலையத் தில், குடும்பம் ஒன்றிற்கு நான்கு என்ற அடிப்படையில் இவ்விநியோ கம் இடம்பெற்றது. (28)

### கோஷ்டி மோதல்களில் நால்வர் காயம்

(நவிண்டில்)

தும்பளையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை ஏற்பட்ட கோஷ்டி மோத லில்- ம.ஞானராசா (37), ஐ.உதயன் (22), உ.சிவயோகராணி ஆகிய மூவர் காயமடைந்த நிலையில் மந் திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் தலையில் வாள்வெட்டிற்கு இலக்காகி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டார்.

இதேவேளை - கொடிகாமம் விடத்தற்பளையில் நடைபெற்ற இன்னொரு கோஷ்டி மோதல் ஒன் றில்- ஒருவர் காயமடைந்த நிலை யில் யாழ். போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (116,28)

### வீதி திருத்தம்

(மானிப்பாய்)

பல காலமாகத் திருத்தப்படாதி ருந்த, சங்கானை - நாகலிங்கம் வீதி ஆறு லட்சம் ரூபா செலவில் தார் வீதியாகப் புனரமைப்புச் செய்யப்பட் டுள்ளது.

இதன்மூலம் இப்பகுதி மக்கள் சங்கானை வைத்தியசாலைக்கு இப் பாதை ஊடாகக் விரைவில் சென்று வர வசதி ஏற்பட்டுள்ளது. (100)

## 'லக்மின' பத்திரிகை ஆசிரியர் பொலிஸாரால் விசாரணை!

(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொலை செய்யத் திட்டமிடப்படுவதான செய் தியைப் பிரசுரித்த 'லக்மின' பத்தி ரிகை ஆசிரியரைக் குற்றப்புலனாய் வுப் பொலிஸார் 4 மணிநேரம் விசா ரித்தனர்.

இது சம்பந்தமாக விசாரணை களை மேற்கொள்ளுமாறு எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ- குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே, பொலிஸார் இவ்விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

## ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் புதிய பாதுகாப்பு நடைமுறைகள்!

### பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐந்து நட் சத்திரக் ஹோட்டல்களில் புதிய பாதுகாப்பு நடைமுறைகளை அமு லுக்குக் கொண்டு வரவுள்ளதாக, கொழும்பு மத்திய பிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரி திஸநாயக்க தெரிவித்தார்.

அண்மைக்காலமாக ஐந்து நட் சத்திரக் ஹோட்டல்களில் பாதாள உலகக் கோஷ்டியினர், மத்திய தரவர்க்கத்தினரின் பிள்ளைகள் மற்றும் அமைச்சர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் சிலரின் பிள் ளைகள் வன்முறையில் ஈடுபடுகின் றனர். இதனால் உல்லாசப் பயணி களும் பாதிக்கப்படுகின்றனர். இத னைத் தடுப்பதற்காகவே புதிய பாது காப்பு நடைமுறைகள் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளன.

ஒவ்வொரு 45 நிமிடங்களிலும் பொலிஸார் ஹோட்டல்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். குறித்த ஹோட்டல்களுக்கு முன்பாக ஓட் டோக்கள் நிறுத்தி வைக்கப்படுவ தும் தடை செய்யப்படும். சந்தேகத் திற்கு இடமான முறையில் நடமாடு வோர் இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் திஸநாயக்க தெரிவித்தார்.



வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கக் கொத்தணி உறுப்பினர்கள், திக்கம் வடிசா லையை ஒப்படைக்கக்கோரி வடிசாலை முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். (116)

## ஆசிய நாடுகளில் அச்சம் நிலவ இலங்கையில் அமைதியான கிறிஸ்மஸ்

### 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் விபரிப்பு

(கொழும்பு)

ஆசியாவின் ஏனைய நாடுகள் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்த அச்சத்தில் இருக்கும்போது, இலங்கையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் எந்தப் பயப்பீதியும் இன்றி மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டதாக 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆசிய நாடுகள் பலவற்றிலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்ற அச்சத்தினால், இறுக்கமான பாதுகாப்புக்கள் போடப்பட்டிருந் தன. நேற்று இந்நாடுகளில் அச்சத்துடனேயே மக்கள் கிறிஸ்மஸ் தினத் தைக் கொண்டாடினர்.

ஆனால், இருபது வருடங்களுக்கு மேலாக நீடித்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையில் இம்முறை மிகவும் அமைதியானதும், மகிழ்ச்சியானதுமாக கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

வீதிச் சோதனை நிலையங்கள், பாதுகாப்புக் கெடுபிடிகள் நீங்கிய நிலையில், எந்த அச்சமும் இன்றி, இலங்கை மக்கள் கிறிஸ்மஸ் தினத் தைக் கொண்டாட தற்போதைய சமாதான முயற்சிகள் வழியேற்படுத்தி யுள்ளதாக ரொய்ட்டர் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

## யாழ்.மாவட்டத்தில்
# புனர்வாழ்வு, புனரமைப்பு முறை; செயலகத்தில் விசேட மாநாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒருங்கிணைந்த புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்கள் குறித்த விசேட மாநாடு ஒன்று, யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முப்பதாம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விசேட மாநாட்டுக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர்களும், திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாட்டின்போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. அத்துடன், புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் குடும்பப்பதிவு அட்டைத்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்தும் ஆராயப்படவிருக்கிறது.

### வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்பட்டப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ஹெமிங்வே எழுதிய நாவலான "THE OLDMAN AND THE SEA" எனும் நாவலின் திரைப்பட வடிவம் காண்பிக்கப்படவுள்ளது. இந்த நாவலின் தமிழாக்கம் "கடலும் கிழவனும்' என்ற பெயரில் ஏற்கனவே வெளிவந்துள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் இத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப் பட்டப்படிப்புகள் அலகின இணைபபாளர் தெரிவித்துள்ளார்.

### பேராசிரியர் சிவசாமிக்கு கௌரவ ஆளுநர் விருது

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருதத்துறை தலைவர் இலக்கிய 'கலாநிதி பேராசிரியர் சிவசாமிக்கு 2002 ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (62)

# மீன்பிடியியல் டிப்ளோமாவுக்கு ஐம்பது மாணவர்கள் தெரிவு!
## மேலும் பத்துப்பேர் காத்திருப்போர் பட்டியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமாக் கற்கை நெறிக்காக ஐம்பது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய கல்வி ஆண்டுக்கு மேற்படி கற்கை நெறிக்காக ஐம்பது மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழகத்தின் பேரவைக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது மாணவர்களை விட, மேலதிகமாக பத்து மாணவர்கள் காத்திருப்போர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். (க)

# அரச நிறுவனங்களின் குறைகாண் கருத்தரங்கு

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக பிரதேச, அரச உள்ளூராட்சி திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் குறைகாண் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில், மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி தொடர்பான மதிப்பீட்டுத் திட்டங்களுடன் வருகை தருமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (34)

### மிதிவெடி அச்சம்

(அரியாலை)

இராணுவத்தினர் வெளியேறிய அரியாலை தபாற்கட்டைச் சந்தி, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை ஆகிய பகுதிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (55)

# கலாசார அமைச்சில் பாரபட்சம் விருது விழாவில் கலந்து கொள்ளேன்!
## - அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு -

கலாசார அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாபூஷணம் விருது வழங்கும் வைபவத்தில், தான் கலந்து கொள்ளப் போவதில்லை என இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

கலாசார விவகார இயக்குநர் லக்ஷ்மன் பெரேராவிற்கு அனுப்பிய கடிதத்திலேயே, அமைச்சர் மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களின் கலாசார விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள தங்களது அமைச்சினால், நாட்டின் அனைத்து இன, மத மக்களும் ஒரே விதமாக அனுசரிக்கப்படுவதில்லை. மாறாக தங்களது அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றபோதும், அவை சிங்கள மக்களின் கலாசாரத்தினையே மேம்படுத்துவனவாக உள்ளன.

தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்நாட்டில் எவருக்கும் வேறுபாடுகள் காட்டப்படமாட்டாது என உறுதியளித்திருக்கும்போதும், தங்களது அமைச்சின் மனப்பான்மை காரணமாக கலாபூஷணம் விருது வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை என அமைச்சர் மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

### கல்வியல் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி இரண்டாம் வருட மாணவர்களையும், அடுத்த ஆண்டு உள்ளகப் பயிற்சியில் ஈடுபடவுள்ள மாணவர்களையும், உள்ளகப் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களையும்- எதிர்வரும் சனிக்கிழமை காலை பதினொரு மணிக்கு, கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் கேட்டுள்ளார்.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வாகனம்!

(சங்கத்தானை)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வின் பின்னர் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட- சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வாகனம், பின்னர் மந்திகையில் ஒப்படைக்கப்பட்டு, அங்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இவ வைத்தியசாலைக்கெனப் புதிய வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (30)

# போர் பாதித்த 414 ஆலயங்கள் இன்னமும் திருத்தப்படவில்லை

கடந்த இருபது வருடங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 414 வணக்கத்தலங்கள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதில் 355 இந்து ஆலயங்களும், 41 கிறிஸ்தவ தேவாலயங்களும், 18 பள்ளிவாசல்களும் அடங்கியுள்ளன.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

**நேற்றைய தொடர்ச்சி.....**

086). வ/கி/1991 திரு. செல்வரட்ணம் பரராஜசிங்கம்
087). வ/கி/2029 திரு. சின்னத்துரை மோகனராசா
088). வ/கி/2045 திரு. இராமசாமி அழகசுந்தரம்
089). வ/கி/2062 திரு. மயில்வாகனம் குணநேசன்
090). வ/கி/2082 திருமதி. இராசம்மா நல்லையா
091). வ/கி/2083 திரு. வேல்நாயகம் கவிஸ்ரஸ்
092). வ/கி/2085 திருமதி. மாரியம்மா சிவராசா
093). வ/கி/2091 திரு. இளையவி நாகமுத்து
094). வ/கி/2097 திரு. வேலு ராஜசேகரன்
095). வ/கி/2133 திரு. நாகலிங்கம் கோபாலராஜா
096). வ/கி/2139 திரு. கிருஸ்ணன் கணேசன்
097). வ/கி/2141 திரு. வேலுப்பிள்ளை தர்மலிங்னகம்
098). வ/கி/2242 திருமதி. ஸ்ரீபவானி இலங்கேஸ்வரன்
099). வ/கி/2278 திரு. கணபதிப்பிள்ளை கனகலிங்கம்
100). வ/கி/2288 திரு. அப்பாப்பிள்ளை அமரசிங்கம்
101). வ/கி/2412 திரு. நடராசா சுந்தரலிங்கம்
102). வ/கி/2414 திருமதி. தங்கராசா நாகேஸ்வரி
103). வ/கி/2450 திரு. சரவணமுத்து கிருஷ்ணநாதன்
104). வ/கி/2464 திருமதி. இராசேஸ்வரி இராசசேகரம்
105). வ/கி/2476 திருமதி. நிர்மலாதேவி கனகசபாபதி
106). வ/கி/2493 திருமதி. ரதிதேவி கனகசிங்கம்
107). வ/கி/2578 திரு. கண்பதிப்பிள்ளை பாலேந்திரகுமார்
108). வ/கி/2586 திருமதி. தனலிங்கேஸ்வரி குகதாசன்
109). வ/கி/2683 திரு. மார்க்கண்டு தம்பையா
110). வ/கி/2753 திரு. இராசையா இராசேந்திரன்
111). வ/கி/2884 திரு. பரமசாமி நவரத்தினராசா
112). வ/கி/2927 திருமதி. இசைஞானவதி பாலச்சந்திரன்
113). வ/கி/2944 திரு. கார்த்திகேசு சடாச்சரம்
114). வ/கி/2986 திரு. சின்னையா பாலகுமாரன்
115). வ/கி/3083 திருமதி. கனகம்மா பெருமாள்
116). வ/கி/3101 திரு. சரவணமுத்து கந்தசாமி
117). வ/கி/3153 திருமதி. பூபதி சிவபாலசுப்பிரமணியம்
118). வ/கி/3321 திருமதி. பார்பரா சகாதேவன்
119). வ/கி/3330 திருமதி. பிறேமிளா நாகநாதன்
120). வ/கி/3344 திரு. கனகரத்தினம் மதியாவரணம்
121). வ/கி/3350 திருமதி. லதாரஞ்சினி கிருஸ்ணமூர்த்தி
122). வ/கி/3426 திரு. கண்ணுச்சாமி ஞானசேகரன்
123). வ/கி/3486 திரு. நாகலிங்கம் கதிரவேலு
124). வ/கி/3493 திரு. செல்லையா ஜெயராசா
125). வ/கி/3533 திரு. சுவாமிநாதன் கோகுலநாதன்
126). வ/கி/3534 திரு. முருகப்பன் நடராசா
127). வ/கி/3542 திரு. இராசையா நிமலேஸ்வரன்
128). வ/கி/3569 திரு. கதிரவேலு சண்முகம்

### வவுனியா மாவட்டம்

001). வ/வ/86 திரு. கந்தையா செல்லத்துரை
002). வ/வ/98 திரு. சுப்பிரமணியம் மர்மலானந்தகுமார்
003). வ/வ/104 திருமதி. கோசலாதேவி கணேசலிங்கம்
004). வ/வ/117 திரு. பெருமாள் சத்திவேல்
005). வ/வ/127 திரு. நாராயணபிள்ளை தியாகராசா
006). வ/வ/164 திரு. கந்தையா முருகேசு
007). வ/வ/222 திரு. ஐயம்பிள்ளை பொன்னம்பலம்
008). வ/வ/244 திரு. சுப்பையா சிவானந்தம்
009). வ/வ/299 திரு. ஞானப்பிரகாசம் பிரான்சிஸ்சேவியர்
010). வ/வ/340 திரு. கந்தையா தில்லைநாயகம்
011). வ/வ/377 திரு. சவரிமுத்து பூலோகசிங்கம்
012). வ/வ/392 திரு. சின்னையா சிவராசா
013). வ/வ/410 திரு. திருநாவுக்கரசு கருணாமூர்த்தி
014). வ/வ/475 திரு. வடிவேலு அமலதாசன்
015). வ/வ/480 திரு. ஜயாத்துரை கார்த்திகேசன்
016). வ/வ/485 திருமதி. சரஸ்வதி பூபாலபிள்ளை
017). வ/வ/503 திரு. கந்தசாமி திருநாவுக்கரசு
018). வ/வ/519 திருமதி. கமலோதயம் பாரதிதாசன்
019). வ/வ/553 திருமதி. இராசம்மா சிதம்பரப்பிள்ளை
020). வ/வ/557 திரு. செல்லப்பா குகதாசன்
021). வ/வ/565 திருமதி. சரஸ்வதி குலேந்திரம்
022). வ/வ/587 திருமதி. ஞானாம்பிகை சின்னையா
023). வ/வ/595 திரு. அருணாசலம் தியாராசா
024). வ/வ/638 திரு. கணபதிப்பிள்ளை தனபாலசிங்கம்
025). வ/வ/642 திரு. சண்முகம் செல்வராசா
026). வ/வ/672 திரு. செல்வரட்ணம் ஸ்ரீகரன்
027). வ/வ/675 திருமதி. கலாநிதி கிருஷ்ணகுமார்
028). வ/வ/676 திருமதி. கமலகுமாரி யேசுராசா
029). வ/வ/678 திருமதி. நகுலாம்பிகை குணசேகரம்
030). வ/வ/707 திரு. ந ம.சே.சொர்ணபாலா
031). வ/வ/723 திரு. சயம்பு குமாரசாமி

### முல்லைத்தீவு மாவட்டம்

001). மு/65 திரு. சேஷையர் திருஞானசம்பந்தசர்மா
002). மு/156 திரு. கந்தப்பிள்ளை சண்முகம்
003). மு/168 திரு. சின்னத்தம்பி முத்தையா
004). மு/184 திரு. செல்லத்துரை பாக்கியநாதன்
005). மு/217 திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளை
006). மு/239 திரு. பொன்னம்பலம் லோகநாதன்
007). மு/248 திரு. கந்தையா தெய்வேந்திரம்
008). மு/252 திரு. சண்முகம் சபாநடேசன்
009). மு/322 திரு. பெரியதம்பி சிவபாலசுந்தரம்
010). மு/342 திருமதி. புஸ்பராணி எதிர்வீரசிங்கம்
011). மு/364 திரு. கணவதிப்பிள்ளை இராசையா
012). மு/392 திருமதி. சுசிலாதேவி நடராசா
013). மு/569 திரு. சண்முகலிங்கம் விஜயரத்தினம்
014). மு/578 திரு. சரவணமுத்து கலைவாணன்
015). மு/838 திரு. பாச்சோ வெலிங்ரன்
016). மு/842 திரு. செல்லதம்பி தெய்வேந்திரம்
017). மு/965 திரு. சுப்பிரமணியம் சிவராசா
018). மு/973 திருமதி. யோகலட்சுமி யோகநாதன்
019). மு/995 திரு. சரவணை ஆறுமுகம்
020). மு/1010 திரு. கனகசபை சந்திரா
021). மு/1159 திரு. கனகரட்ணம் கந்தையா
022). மு/1170 திரு. குலசேகரம் செல்வரத்தினம்
023). மு/1192 திரு. கனகையா சிங்கநாயகம்
024). மு/1194 திரு. நல்லையா பரமானந்தம்
025). மு/1295 திரு. நாகலிங்கம் ஞானலிங்கம்
026). மு/1488 திரு. கந்தையா ஆறுமுகம்
027). மு/1491 திரு. சங்கரப்பிள்ளை அருளம்பலம்
028). மு/1500 திருமதி. புஸ்பராணி பாலசிங்கம்
029). மு/1537 திரு. வல்லிபுரம் மயில்வாகனம்

### மன்னார் மாவட்டம்

001). ம/29 திருமதி. வனஜராணி இராமச்சந்திரன்
002). ம/105 திரு. பண்டாரம் பொன்னம்பலம்
003). ம/118 திருமதி. சேதுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
004). ம/179 திருமதி. ஜெயமணி சோதிலிங்கம்
005). ம/204 திரு. திருச்செல்வம் பரஞ்சோதி
006). ம/220 திரு. சின்னையா கணேஸ்
007). ம/317 திரு. வரப்பிரகாசம் சுவக்கீன்
008). ம/506 திரு. அகஸ்ரின் அன்ரனி
009). ம/524 திரு. சபாநாயகம் சாந்தசீலன்
010). ம/536 திரு. அந்தோனிப்பிள்ளை - புஸ்பராசா
011). ம/577 திரு. தொம்மை சந்தியாகுருஸ்
012). ம/603 திரு. அந்தோனிப்பிள்ளை அன்ரண்டயஸ்
013). ம/620 திரு. அருள்வாசம் மிக்கேல்
014). ம/756 திரு. அருளப்பு அருள்நேசவாசன்

✻

# தென்னாசிய முகாமையாளர்கள்

### அறிமுகம்

ஜப்பானியர்கள், சந்தைப்படுத்தலானது ஒரு நிறுவனத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் அக்கறைக்குட்பட்டதெனக் கருதுகின்றார்கள். ஒரு நிறுவனத்தின் ஒவ்வொரு தொழிலாளியும் அவன் வெளியுலகுடன் தொடர்புகொள்ளுகின்றபோது ஒரு சந்தைப்படுத்துநராகவே இருக்கின்றான். சில அமெரிக்கக் கம்பனிகளில் சந்தைப்படுத்தல் தத்துவமாகக் காணப்பட்டாலும் (Wal-mart) ஜப்பானில் ஒரு சட்டமாகவே காணப்படுகிறது.

பொறியியல் பின்னணியைக் கொண்ட பல முகாமையாளர்கள், ஜப்பானிய உற்பத்தி நிறுவனங்களில் சந்தைப்படுத்தலில் ஈடுப

பாடுகளை ஒரே நேரத்திலேயே நிறைவேற்றுகிறார்கள்.

ஜப்பானியர்கள் - சந்தைப்படுத்த




லை, அறிவுநிலை சார்ந்ததாகவும், வாடிக்கையாளரின் உள்ளுணர்வை மேம்படுத்துவதாகவும் கருதுகிறார்

கும். எந்த ஊழியன் தனது தொழிலின் பெருமையை அல்லது மேன்மையை உணருகின்றானோ அவன் விரைவாக மேல்நிலைக்கு வரக்கூடியவனாகவும், வாடிக்கையாளரின் பிரச்சினைகளை அறிந்து உடன்

# ஜப்பானிய சந்தைப்படுத்தலிலிருந்து

டுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதுடன், சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிக்கும் தமது பங்களிப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கின்றனர். ஜப்பானியர்கள் திறன்களை விருத்தி செய்ய உற்பத்தி நிறுவனத்திலேயே பயிற்சியை வழங்குகிறார்கள். அவர்கள், இளநிலைப் பட்டதாரிகளையே தெரிவுசெய்து அவர்கள் நடுத்தரமட்ட முகாமைத்துவத்தை அடையும்வரை பயிற்சிகளை வழங்குகின்றனர்.

எனவே - இக்கட்டுரையில் எவ்வாறு ஜப்பானியர்களின் சந்தைப்படுத்தல் நடத்தைகளானது அவர்களது வெற்றிக்கும், தென்

கள். ஆனால் - தென்னாசிய முகாமையாளர்கள், தாங்கள் ஒரு துறைசார் நிபுணர்கள் எனக் கருதி தமது கைகள் அழுக்கடைவதை விரும்புவதில்லை.

ஜப்பானியர்களின் தொழில் விழுமியத்தின்படி (Norms) தாழ்நிலை வேலைகள்கூட (Humblest Job) அதிகூடிய கவனத்துடனே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் தாழ்நிலை ஊழியர்கள்கூட சுயமரியாதைக்குரியவராகக் காணப்படுகின்றார்கள். ஆனால், தென்னாசிய நாடு களில் சமூக அந்தஸ்து (Social Status) என்ற போர்வையில் கீழ்நிலை ஊழியர்கள் சுயமரியாதைக்

தீர்வு செய்யக்கூடிய இயலுமை உடையவனாகவும் இருப்பான்.

வாடிக்கையாளன் ஒருவன் தவறிழைத்திருப்பின், ஜப்பானியர்கள் அதனை வாடிக்கையாளன் மேல் சுமத்திக் குறைகூறுவதனை தவிர்த்து, பிரச்சினையைத் தாமே இரகசியமாகத் தீர்க்க முயல்கின்றனா. மேலும் ஏதாவது வாடிக்கையாளருக்கு வசதியீனங்கள் ஏற்பட்டாலும் தாமே மன்னிப்புக்கோரி அதனைச் சீர்செய்கின்றனர். இவ்வாறான ஒரு நிலையைத் தென்னாசிய முகாமையாளர்களிடம் காண்பது அரிது. தென்னாசியா முகாமையாளர்கள், தவறுகளுக்கான பொறுப்புக்களின் சுமை

# கற்றுக்கொள்ளும் பாடம்

ஆசிய முகாமையாளர்களுக்கான படிப்பினையாகவும் காணப்படுகிறது என ஆராய்வோம்.

மும்தாஷா அகமட்கான் (Mumtaz Ahmad Khan) என்ற இந்திய வியாபாரச் சந்தைப்படுத்தல் நிபுணர் - ஜப்பானில் தான்பெற்ற நேரடி அனுபவத்திலிருந்தும் Hosei பல்கலைக்கழகத்தில் தான் பெற்ற ஆராய்ச்சி நடவடிக்கையிலிருந்தும், எழுதிய கட்டுரையிலிருந்து - பிரித்தெடுக்கப்பட்ட முக்கிய பகுதியை இங்கு தருகின்றேன்.

### ஜப்பானியர்களின் சந்தைப்படுத்தல் தத்துவம்

ஜப்பானிய சந்தைப்படுத்துநர்கள் பயிலுநர் /பயிலக் கற்றுக்கொள்பவர் என்ற நிலையிலேயே நோக்கப்படுகின்றார்கள் (Amateurs). அதாவது - அவர்கள் குறிப்பிட்ட சந்தைப்படுத்தல் நோக்கத்திற்காக தொழில்சார் உதவிகளை வழங்குபவர்களாகக் காணப்படுகிறார்கள்.

தென்னாசிய நாடுகளின் வியாபாரக் கழகத்தின் பார்வையிலிருந்து, வேறுபட்ட பார்வையிலேயே, அவர்கள் வாடிக்கையாளர்களை (Customers) புலனுணர்ந்து கொள்கிறார்கள்.

அவர்களுடைய பார்வையில் வாடிக்கையாளர்களை ஒரு விசேட விருந்தாளியாகவும், ஒரு கடவுளாகவும் பார்க்கின்றார்கள். அதாவது - வியாபார நிறுவனத்தில் வாடிக்கையாளரின் வருகை சிறந்த வாழ்த்தாக ஜப்பானியர்களால் நோக்கப்படுகிறது.

ஒரு விருந்தினரைக் கையாளுவது என்பது உயரிய மனதத்தோடு, எளிதாக, சிறந்த உணர்வை ஏற்படுத்திச் சாதாரணமொழி நடையில் உரையாடுதல் என்பதைக் கருதுகின்றது.

மேலும் - ஜப்பானியர்கள் வாடிக்கையாளர்களின் முதல் சந்திப்பிலேயே நெருங்கிய உறவுமுறையை விருத்தி செய்கின்றார்கள். அவர்கள் - வாடிக்கையாளரின் உறவுமுறையை வலுப்படுத்தல், விசுவாசத் தன்மை உருவாக்குதல், பிரச்சினைக்கான உடனடித் தீர்வுத்திட்டங்களை அமுல்செய்தல், சந்தைத் தடைகளை அகற்றுதல் போன்ற செயற்

குரியவராகக் கருதப்படுவதில்லை.

தென்னாசிய நாடுகளில் ஒரு தொழிற்சாலையின் உரிமையாளர்/பணிப்பாளர் - மேல்நிலை ஊழியராக நிறுவனத்துக்குள் நுழையும்போது, அவர் - நிறுவனத்தின் செயறபாடுகளைப் பரிசோதனை செய்வதுடன், பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி



ஆளணி முகாமையைத் தூண்டுதல் மிக முக்கியமான கருமமாகக் காணப்படுகிறது. அதாவது - இங்கு அவர் ஒரு மிக முக்கிய மனிதராகவும், எதைத் தான் நினைக்கின்றாரோ அதுவே நிறைவேற்றப்பட வேண்டும் என விரும்புபவராக காணப்படுகின்ற அதேவேளை,

**இ.அ.ஜெயக்காந்தன்**

இதற்கு மாறாக ஜப்பானிய உரிமையாளர்கள் நிறுவனத்துள் நுழையும் போது - தனது கீழ்நிலை ஊழியர்களுக்கு (Sub ordinates) வாழ்த்துத் தெரிவித்தல், குப்பைகள்/பயன்பாட்டிற்கு உதவாத பொருட்கள் என்பவற்றைப் பொறுக்கி அதனை அகற்றுதல் என்பவற்றை அவர்களே செய்கிறார்கள். இதிலிருந்து கற்க வேண்டிய படிப்பினை யாதெனின், தாழ்நிலை வேலைகள்கூட மிக முக்கியமானதாகும்.

ஜப்பானிய சந்தைப்படுத்துநர்கள் வாடிக்கையாளரின் உறவை வலுப்படுத்துவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். ஜப்பானிய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அவர்களது வேலை முக்கியத்துவமற்றதாக இருப்பினும், நிறுவன வெற்றிக்கு அது அத்தியாவசியமானது என வழிநடத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தலை நோக்கிய இந்த வாடிக்கையாளர் - ஊழியர் உறவுமுறை மிகமுக்கியமானதா

யைத் தமது கீழ் ஊழியர்களின் மேலே சுமத்துகின்ற அதேவேளை, ஜப்பானிய முகாமையாளர்கள் தாமே முழுச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பு என உணருகிறார்கள்.

உதாரணமாக - ஒரு துணி உற்பத்தியாளர் (வடிவமைப்பவர்) தைத்த ஆடைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு பதிலளிக்கின்றார். அவர் விற்பனையாளர்களின் பின் ஒளிந்துநிற்பதில்லை. அத்துடன் சிரேஷ்ட முகாமையாளர்கள் கால இடைவெளிகளில் தமது கம்பனியின் விற்பனை நிலையங்களுக்குச் சென்று ஆராய்வதுடன் கொள்வனவாளர்களுடனும் நேரடியாக உரையாடுகின்றார்கள். ஆனால் குறுகிய எண்ணம் கொண்ட தென்னாசிய முகாமையாளர்கள், தாம் தொழில்சார் திறனுடையவர்கள் என்ற நிலையிலேயே தம்மை நோக்குகின்றார்கள். இவ்வாறு - ஜப்பானியர்களின் சாதகத் தன்மையான உளப்பாங்குகள், சர்வதேச சந்தைகளில் ஒரு பலம் பொருந்திய போட்டித் தன்மைக்கான அனுகூலமாகக் காணப்படுகின்றன.

### வாடிக்கையாளர்களின் திருப்தி

ஜப்பானியர்கள் ஒருபொழுதும், வாடிக்கையாளர் திருப்திக்கு முழுமையான உத்தரவாதமளிப்பதில்லை. மாறாக, அவர்கள் அதற்காக முயற்சிக்கின்றார்கள். ஜப்பானியர்களின் புலனுணர்வின்படி (Perception) - கொள்வனவாளனை ஒரு கடவுளாகவும், சந்தைப்படுத்துநர்கள் - அவர்களுடைய வேலையாளிகளாகவும் கருதுகின்றார்கள். இவ்வாறான வாடிக்கையாளர் பற்றிய நோக்குதலே, உக்கிரமான போட்டித் தன்மையுள்ள சர்வதேச சந்தையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய சவால்களின் மத்தியில் வளர்ச்சியடைந்து வரும் வர்த்தக வங்கித் தொழில்

உலகெங்கிலும் உள்ள வங்கித் தொழிற்துறையானது பாரிய சவால்களையும், போட்டித் தன்மையையும் சந்தித்து வருகின்றது. இன்றைய நவீன பொருளாதாரமானது பண்டைய பொருளாதார முறையில் இருந்து பல்வேறுபட்ட முறைகளில் முற்றிலும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. அந்த வகையில் - வங்கி நிறுவனங்கள் தமது வளர்ச்சிக்கும், தமது நிலையைப் பேணிக் கொள்வதற்கும் பல்வேறு சந்தர்ப்பங்களை இன்றைய நவீன பொருளாதாரம் வழங்கியுள்ளது. பாரம்பரிய வங்கித் தொழில் முறையானது, இன்று அருகிவருவதுடன் புதிய உலக பரிமாண வளர்ச்சிக்கு ஏற்றவகையில் இன்றைய வங்கித் தொழிலானது மாற்றம் அடைந்து வருகின்றது. இன்றைய தகவல் யுகத்தில் (Information Era) பூகோள மயமாக்கலின் (Globalization) விளைவாக, உலகமானது ஒரு பூகோள கிராமமாகச் சுருங்கி வருகின்ற நிலையில், மனித வாழ்வின் அனைத்து துறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற இன்றையகாலகட்டத்தில், மிகவும் தீவிரமான மாற்றங்களும் (Ever changing world), கடும் போட்டி நிலவிவரும் இன்றைய காலகட்டமும் - ஒவ்வொரு துறைகளிலும் இயங்கி வருகின்ற நிறுவனங்கள், தமது சந்தைப் பங்கினை (Market share) பேணிக் கொள்ளவும் சந்தையில் நிலைத்திருப்பதற்கும் - பல்வேறுபட்ட தந்திரோபாயங்களை வகுத்து, அதற்கேற்ப செயற்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

வர்த்தக வங்கித் தொழிற்துறையும் உலகின் இன்றைய போக்கிற்கிணங்க செயற்பட வேண்டிய முக்கிய துறையாக விளங்கிவருகின்றது. வங்கித்துறையைப் பொறுத்தவரையில் நிதித்துறையின் தாராளமயமாக்கல், தொழில்நுட்ப மாற்றங்கள், மற்றும் சிக்கலான நிதித் திட்டங்களின் அறிமுகம் என்பன புதிய வங்கி செயற்பாட்டிற்கு அடிகோலியுள்ளன. பல ஆசிய நாடுகளின் வங்கித் துறையானது - தமது தொழிற்துறையை புதிய மாற்றங்களுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்லும்பொருட்டு தமது செயற்பாடுகளை மீள்கட்டமைப்பு செய்வதற்கு பல நிகழ்ச்சித் திட்டங்



களை அறிமுகப்படுத்தியுள்ளன.

1970களின் பிற்பகுதிவரை அமைதியான, பாதுகாப்பான சூழ்நிலையில் இருந்து வந்த இலங்கையின் வர்த்தக வங்கித்துறைச் சந்தை - அதற்குப் பின்னர் தனக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்த இடத்தைப் பேணிக்கொள்வதில் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. அத்துடன், இன்றைய உலகின் தனியார்துறையின் சந்தைப் பொருளாதார வளர்ச்சிக்கமைய உலக நாடுகளில் பாரிய பங்களிப்பினைத் தனியார்துறையைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் வழங்கி வருகின்றநிலையில்- இலங்கையிலும் இதன் தாக்கம் பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

இலங்கையில் தனியார்துறை வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரையில், அவற்றின் வளர்ச்சியானது - தனியார் துறை வர்த்தகர்களினூடான போட்டி அடிப்படையிலேயே வளர்ச்சியடைந்து வந்துகொண்டிருக்கின்றது. அரச வங்கிகளைப் பொறுத்தவரையில் தனியார்துறை வங்கிகளுடன் போட்டியிடக்கூடிய நிலையில் - உள்ளார்ந்த பலவீனங்கள், நிர்வாகக் கெடுபிடிகள், அரசியல் தலையீடு என்பன நிறைந்து காணப்படுகின்ற நிலையில், அவற்றின் செயற்பாடுகள் தனியார்துறையுடன் போட்டியிடக்கூடிய நிலையில் தன்னைத் தற்பொழுது தயார்படுத்தக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் - அரச வங்கிகள் இலங்கை முழுவதிலும் உள்ள கிராமப்புறங்கள் முழுவதும் பரந்து, விரிந்த கிளைப்பரம்பலைக் கொண்டுள்ளமை - அரச வங்கிகளைப் பொறுத்தவரையில் ஓர் பலமாகக் காணப்பட்டாலும், தற்போது - அபிவிருத்திஅடைந்துவரும் தனியார்துறை வங்கிகளின் கிராம மட்டத்தின் கிளைப்பரம்பலானது, உண்மையில் அரச வங்கிகளுக்கோர் அச்சுறுத்தலாகும்.

கிராமமட்டத்தில் உள்ள புதிய அறிவு உட்பாய்ச்சலானது தனியார் துறையின் வங்கிச் செயற்பாட்டிற்கு ஓர் பலமாக அமைந்துள்ளது என்பது மறுக்க முடியாது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் நவீன ஊடகங்கள் என்பவற்றின் காரணமாக வாடிக்கையாளரது தெரிவும், விழிப்புணர்வும் பாரிய அளவில் விரிவடைந்துள்ளது. தொழில்நுட்பத்தினை தரமுயர்த்திக் கொள்வதன் மூலமும், சர்வதேசரீதியில் பின்பற்றப்பட்டு வரும் மிகச் சிறந்த நடைமுறைகளை பின்வற்றுவதன்மூலமும், தனியார் வங்கிகள் தமது செயற்பாடுகளின் விரைவினையும், தரத்தினையும் பேணிக்கொள்ள முன்வந்தமை - அரச வர்த்தக வங்கிகளின் செயற்பாட்டுக்கு பல விதத்திலும் போட்டி தன்மையை உருவாக்கியுள்ளது.

**எஸ்.வசந்தகுமார்**

1980 களில் இலங்கையில் வெளிநாட்டு, உள்நாட்டு, தனியார் வங்கிகளின் உட்பிரவேசத்துடன் அன்று தொடங்கிய போட்டித்தன்மையானது இன்று பாரிய விஸ்வரூபம் எடுத்துள்ளது. மேலும் - சந்தையில் போட்டித் திறனுடன் செயற்படும்பொருட்டு, மூலதனம் மற்றும் ஊழியம் என்பனவற்றின் வெளியீட்டுத்திறனை விருத்தி செய்துகொள்ள வேண்டிய தேவையையும் அவை உணர்ந்து கொண்டன.

இந்தப் பின்னணியில் சொத்துக்கள் மீதான ஆதாயம் (ROA), பங்கு மீதான ஆதாயம் (EPS), ஊழியர்களின் உற்பத்தித்திறன், செயற்படாத சொத்துக்களின் அளவு மற்றும் ஏற்பாடுகளும் ஒதுக்கங்களும் போன்ற பல்வேறுபட்ட குறிகாட்டிகள் போட்டித்திறன் அளவுகோல்களாகக் கருதப்படுகின்றன. இந்த வகையில் வங்கிகள் புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்ததான வாடிக்கையாளர் சேவைகளை, இடையறாது விரிவடைந்து வரும் வாடிக்கையாளரது விருப்பங்களுக்கமைய - தமது செயற்பாடுகளை விரிவாக்கி வருகின்றன. இந்த வகையில் வர்த்தக வங்கிகள் தமது செயற்பாடுகளை புத்தாக்கப்படுத்தி வருகின்றன.

(வியாழக்கிழமை தொடரும்)

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

தமிழின்பன்

இன்றைய அத்தியாயத்தில் யாழ்ப்பாணம் மேற்குக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றி நோக்குவோம்.

யாழ்.குடாநாட்டின் கடலுணவு உற்பத்தியில், யாழ். மேற்கு கடற்தொழில் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இக்கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் பகுதிகளாவன.

* குருநகர்
* நாவாந்துறை
* கொட்டடி
* கொக்குவில் மேற்கு என்பனவாகும்.

## அன்றும்

இங்கு கொக்குவில் மேற்குப் பகுதியில் மிகக் குறைவான கடற்தொழிலாளர்களே உள்ளமையால், குருநகர், நாவாந்துறை, கொட்டடிப் பிரதேசங்களை முக்கியமாக இங்கு நோக்குவோம்.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியை இப்பகுதி கடற்தொழில் நடவடிக்கைக்கான ஒரு பொற்காலம் என்று



கூறினால் அது மிகையாகாது. சாதாரணமாக - அக்காலப் பகுதியில் 3 1/2 தொன் இழுவைப் படகுகள், தும்புக் கண்ணாடி வள்ளங்கள், இயந்திரமாக்கப்பட்ட மற்றும் இயந்திரமாக்கப்படாத வள்ளங்கள் பல நூற்றுக்கணக்கில் தொழிலில் ஈடுபட்டன. அதுமட்டுமல்ல - கொட்டடிச் சந்தை, சின்னக்கடை போன்ற சந்தைகளில் எந்நேரமும் என்ன வகையான மீனையும் எந்தளவுக்கும் கொள்வனவு செய்யலாம் என்ற நிலை இருந்தது. மேலும் - தினமும் மாலை 2 மணியிலிருந்து பெருமளவு மீன்களை ஏற்றியவாறு கொழும்பை நோக்கி லொறிகள் புறப்பட்டுச்செல்லும். இம்மக்களின் செல்வச்செழிப்பு, குடாநாட்டு மீன்வளத்தின் சான்றாக இருந்தது. ஆனால் - பொறுக்கமுடியாத வன்செயல்களின் ஆரம்பத்தோடு இம்மக்களின் தொழில்வளங்கள் முடக்கப்பட்டுப் படிப்படியாக வறுமைக்கோட்டை நோக்கித் தள்ளப்பட்டனர். இக்கடற்தொழில் பரிசோதகர் பகுதிகளில் பொதுவாக அழிவடைந்த கடற்தொழில் கலங்களின் விபரங்கள்.

| | | |
|---|---|---|
| * 3 1/2 தொன் இழுவைப்படகுகள் | - | 300 |
| * F.G.B. (தும்புக் கண்ணாடி) படகுகள் | - | 165 |
| * வள்ளங்கள் | - | 761 |

பொதுவாக இப்பிரதேச கடற்தொழிலாளர்கள் - குருநகர் கடல் நீரேரி, பண்ணைக்கடல், பாலைதீவு, கற்கடத்தீவு, சிறுத்தீவு, நாவாந்துறைக்கடல் போன்ற இடங்களில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இப்பகுதியானது நிர்வாகரீதியாக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவினுள் அடங்குகிறது. மொத்தம் ஒன்பது கிராம சேவகர் பிரிவுகள் இங்கு காணப்படுகின்றன.

### யாழ். குடாநாட்டின் மேற்கு கடற்பரிசோதகர் பிரிவின் இன்றைய நிலை

இன்று இப்பிரதேசத்தில் காணப்படும் கடற்தொழிற் கல விபரங்கள்.

| | | |
|---|---|---|
| * இயந்திரமாக்கப்படாத வள்ளங்கள் | - | 306 |
| * F.G.B (தும்புக் கண்ணாடி) படகுகள் | - | 73 |
| * இழுவைப்படகுகள் | - | 60 |

இப்பிரதேசத்தின் தற்பொழுது வதியும் குடும்ப விபரங்கள் -

| கடற்தொழில் பகுதிகள் | குடும்ப எண்ணிக்கை | மீனவர்கள் | குடித்தொகை |
|---|---|---|---|
| குருநகர் | 1864 | 1900 | 6925 |
| நாவாந்துறை | 300 | 200 | 1200 |
| கொட்டடி | 90 | 95 | 450 |
| கொக்குவில் மேற்கு | 35 | 25 | 135 |

பொதுவாக - இப்பிரதேசத்தில் 'சிறகு வலை' எனும் மீன்பிடி வலை மூலம் தொழில் செய்யப்படுகின்றது. இம்முறையில் கடலிலே வலைகளையும், கம்புகளையும் பயன்படுத்தி கூடு போன்ற அமைப்பை ஏற்படுத்துவர். அதன் பின்னர் மீன்கள் இக்கூட்டினுள் அகப்பட்டதும், ஒவ்வொரு நாள் காலையிலும் மீன்களைச் சேகரிப்பர். இதில் மீன்கள் பிடிக்கப்படும்வரை உயிருடனேயே இருக்கும். பெரும்பாலும் இப்பிரதேசத்தில் பாரை, சுறா, கும்பிளா, இறால் போன்றன கூடுதலாகப் பிடிக்கப்படுகின்றன. இதனால் இப்பகுதி மீனவரின் வருவாய் ஏனைய பிரதேச மீனவரைவிடக் கூடுதலானதாகும்.

கடற்தொழிலாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக ஆறு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. இச்சங்கங்களினூடாக U.N.H.C.R. நிறுவனமானது, குருநகர்ப் பகுதிக்கு 5 லட்சம் ரூபாவினை சுழற்சிமுறைக்கடனாக வழங்கி வருகின்றது. விதவைகளுக்கு என 3 லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளது. அதேபோல் நாவாந்துறைப் பகுதிக்கு 5 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது. மேலும் UNDP நிறுவனமானது குருநகர்ப் பகுதிக்கு 4 வள்ளங்களையும், நாவாந்துறைக்கு 2 வள்ளங்களையும் வழங்கியுள்ளது. மேலும் - 2.5 மில்லியன் ரூபா செலவில் UNHCR நிறுவனமானது, குருநகர் மொத்த விற்பனைச் சந்தையைத் திருத்தம் செய்து கொடுத்துள்ளது. கடற்தொழில் திணைக்களமானது, ரூ. 180,000 செலவில் இப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவுசெய்து கொடுத்துள்ளது.

பொதுவாக - இப்பகுதிகளில் தற்பொழுது மாதாந்தம் 70,000 Kg இற்கு மேற்பட்ட மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மேலும- இப்பகுதிகளில் நண்டு, இறால், கணவாய் வகைகளுக்குத் தற்பொழுது பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இவை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இங்கு சந்தைகளில் இவற்றுக்குக் கேள்வி எழுந்துள்ளது.

மேலும் - இப்பிரதேசத்தின் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களினால், சிறுவர் முன்பள்ளிகள் நடாத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| குருநகர்ப் பகுதியில் | - | 03 முன்பள்ளிகள் |
| நாவாந்துறையில் | - | 01 முன்பள்ளி |
| கொட்டடியில் | - | 01 முன்பள்ளி, என முன் |

பள்ளி கள் அமைக்கப்பட்டுள்ளன.

### இப்பகுதியில் காணப்படும் பிரதான பிரச்சினைகள்

*1) இடநெருக்கடி*

இப்பிரதேசத்தின் குடியிருப்பின் அளவு குறைவாகவும், மக்கள் நெருக்கம் அதிகமாகவும் காணப்படுகிறது. இதனால் குடியிருப்புத் தேவைகள் அதிகரிக்கின்றன. இதற்குச் சிறந்த திட்டமிடல் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். உதாரணமாக, இங்கு உள்ள தொடர்மாடி இப்பிரதேச மக்களுக்கும் பொருத்தமற்ற ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் - இவர்கள் வேலை செய்வதற்கு இவர்களால் காஸ் அடுப்பு பயன்படுத்த முடியாது. விறகே பயன்படுத்துகின்றனர். 5 ஆம் மாடியில் உள்ள ஒரு குடும்பம் - நீரிலிருந்து, விறகுவரை மேல் மாடிக்குக் கொண்டு சென்று தமது தேவைகளை நிறைவேற்றுவது என்பது பொருத்தமற்ற ஒன்றாகவே உள்ளது. எனவே, பயன்பாடற்ற நிலத்தைத் தெரிவுசெய்து, உதாரணமாக - பொம்மைவெளி போன்ற பகுதிகளில் வீட்டுத்திட்டம் ஒன்றை அமைத்து, அங்கு அடிப்படை வசதிகளைச் செய்து, மக்களைக் குடியமர்த்துவதன் மூலம் இடநெருக்கடி தவிர்க்கப்படலாம்.

*2) அடிப்படைச் சுகாதார வசதிகள்*

மக்கள் நெருக்கம் அதிகமாகவும், நீர்வளம் குறைவாகவும் இருப்பதால் - பல குடும்பங்கள் ஒரு கிணற்றை அல்லது ஒரு குழாயைப் பயன்படுத்தும் நிலை காணப்படுவதாலும், மலசலகூட வசதிகள் குறைவாக இருப்பதாலும்- தொற்றுநோய்கள் இலகுவில் பரவும் அபாயம் காணப்படுகிறது. எனவே, அடிப்படைச் சுகாதார வசதிகளில் அதிக கவனம் செலுத்துவதுடன், மக்களிடையே விழிப்புணர்வினையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

*3) கல்வி*

கல்விநிலையும் இங்கு பாதிக்கப்பட்டதாகவே உள்ளது. கல்வியை இடையில் கைவிட்டுத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் தொகை அதிகமாகவுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திலும் அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் உள்ளதாலும,

## இன்றும்

பிள்ளைகளைக் கற்பிக்க வசதியின்மையாலும் இடைநடுவில் கல்வியைக் கைவிடும் நிலையுள்ளது. எனவே - கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலவ சக் கல்வித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தித் தரம் 11 வரையாவது கல்வி ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளலாம்.

*4) மதுப்பாவனை*

இப்பிரதேசத்தில் சட்டவிரோத மதுப்பாவனை அதிகரிப்பு பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இது குடும்பங்களின் வருமான மட்டத்தைக் குறைத்து தொழிலாளரின் ஆயுளைக் குறைக்கின்றது. இவ்விடயமானது இப்பிரதேசத்தின் பாரிய பிரச்சினைகளின் தோற்றுவாயாகவுள்ளது. இது தொடர்பில் சமூக உளவளத்துணையாளர்கள் முழு அளவில் செயற்பட வேண்டிய தேவை என்றுமில்லாத அளவு இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. *

## தென்னாசிய...

அவர்களது சந்தைப்படுத்தல் நடவடிக்கையை விருத்தி செய்தது. ஜப்பானியர்களின் கருதுகோளின்படி மக்கள் அன்புடமைக்கு அல்லது சமூகத்தைச் சார்ந்திருப்பதற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். இந்த வேறுபாடுகள் - ஜப்பானினதும் மற்றைய நாடுகளினதும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை வேறுபடுத்துகின்றது.

வாடிக்கையாளரை உபசரித்தல் என்ற விடயத்தில், தென்னாசியர்கள் ஒரு இறுக்கமான அணுகுமுறை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். அதேவேளை - இங்குள்ள பிரச்சினையென்னவெனில், விற்பனையாளரும் நுகர்வோரும் சமதன்மை அற்றவர்களாகவும், அவர்களது உறவு பேரம் பேசும் விடயத்தில் தங்கியிருப்பதாகவுமே காணப்படுகிறது. இது ஒரு பூச்சிய விளைவான நிகழ்வாகவே காணப்படும் (Zero Sum Game). அதாவது - ஒரு பகுதியினர் வெற்றியாளராகவும் மற்றவர் கைவிடப்படுபவராகவும் இருப்பர். எனவே- இங்கு கையாளுந்திறன் (Manipulation) என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது - இங்கு சந்தைப்படுத்துநர்கள், வாடிக்கையாளரின் மறைமுகமான உந்துதல்களை (Motives) கண்டறிந்து, அவற்றைச் சுரண்டுகின்றார்கள். இதனால் வாடிக்கையாளர் - உற்பத்தியாளர், விற்பனையாளர்களில் அவநம்பிக்கை கொள்கிறார்.

எனவே, எவ்வாறு பூச்சியநிலையிலிருந்து வெற்றி நிலைக்குச் செல்லுதல் (Zero Sum Game in to Win - Win Situation) என்பது முக்கியமானது. அதாவது, உற்பத்தியாளரின் வெற்றியானது - வாடிக்கையாளரினைத் திருப்திப்படுத்துவதன் மூலமும், வாடிக்கையாளர் கொடுப்பனவானது உற்பத்தியாளருக்கு உதவுவதன்மூலமும் பரஸ்பரம் உருவாக்கப்படவேண்டும்.

விற்பனையாளர் - தனது வளங்கள், வாடிக்கையாளரின் விருப்பம், தேவைகளை அறிவதற்கு - கடினமாக உழைக்க வேண்டியிருப்பதுடன், வாடிக்கையாளரும் தங்களது திருப்தியை விற்பனையாளருக்கு வெளிப்படுத்துவதற்காக அதிகமாக முயற்சி எடுக்க வேண்டும். இந்நிலைமை ஜப்பானில் காணப்படுகின்றது. அங்கே - நிறுவனங்களும் அவற்றின் வாடிக்கையாளர்களும் உற்பத்தி விருத்தியில் சேர்ந்து வேலை செய்கிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாகத் தென்னாசியாவில் இந்நிலை காணப்படுவதில்லை.

இவ்வாறான வாடிக்கையாளர் - விற்பனையாளருக்கிடையில் காணப்படும் பரஸ்பர உறவு, சந்தைப்படுத்தல் நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதாக ஜப்பானியர்களால் கையாளப்படுகின்றது. ஜப்பானியக் கம்பனிகள் விளம்பரங்களின் மூலம் வாடிக்கையாளரை ஏமாற்றுவதில்லை. மாறாக அவர்கள், வாடிக்கையாளர்களுக்கு, பெறுமதி அதிகரிப்புக்காக (Value Addition), வாடிக்கையாளர் குழு மேன்மைத்தன்மைக் கருத்துக்களை பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக - Yamaha Piano ஒன்றைக் கொள்வனவு செய்பவருக்கு, பல்வேறு மட்ட பயிற்சித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்விதம் ஜப்பானிய முகாமைத்துவ, விநியோக வழிமுறைகளானது - விற்பனையை அதிகரிப்பதை மட்டும் நோக்காகக் கொள்ளாது, வாடிக்கையாளருடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்து, நல் உறவின் மூலம் பரஸ்பரம் பயனடையக் கூடியதாக - ஆரோக்கியமான பரிமாற்றங்களாக முன்னெடுக்கப்படுகின்றன.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | ஊர்காவற்றுறை | நெல்லியடி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 80/- | 60/- | 60/- | 70/- | 70/- | 70/- |
| பச்சை மிளகாய் | 70/- | 40/- | 60/- | 80/- | 60/- | 60/- |
| கத்தரிக்காய் | 100/- | 100/- | 80/- | 80/- | 60/- | 90/- |
| பாகற்காய் | * | 130/- | 110/- | * | 80/- | 100/- |
| வெண்டிக்காய் | 50/- | 60/- | 40/- | 60/- | 60/- | 30/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 70/- | 70/- | 75/- | 80/- | 80/- |
| பீற்றூட் | 60/- | * | 40/- | 40/- | 40/- | 30/- |
| கரட் | 80/- | 80/- | 65/- | 80/- | 40/- | 70/- |
| பயிற்றை | 90/- | 80/- | 70/- | 100/- | 120/- | 80/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந்து அற்று.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## மார்க்கம் தவறும் மதகுருக்கள்

உலகிலுள்ள அனைத்து மதங்களும் மனிதனை நல்வழிப்படுத்துவதையும், ஒழுங்கான பாதையில் அவனை வழிச்செலுத்துவதையுமே நோக்காகக் கொண்டுள்ளன.

தீய எண்ணங்களை, தீய செயல்களை விடுத்து அமைதியும், நிம்மதியும் சூழ்ந்த உலகமே, கடவுளுக்கு விருப்பமானதென்பதே மதங்களின் ஆழ்ந்த நோக்குகள் எடுத்துக்கூறுகின்றன.

இந்த வகையில், உலகின் பழமையான மதங்களில் ஒன்றான பௌத்தத்தில்- நல்ல சமூகத்தையும் நல்ல வாழ்க்கையையும் உருவாக்குவதே பிரதான இலக்கெனக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

புத்த பெருமான் போதித்துச்சென்ற உயர் கருத்துக்கள் மனித குலத்தின் உயர் விழுமியங்களாகப் போற்றப்படுகின்றன.

ஆனால், பௌத்த மதத்தை, அதன் தத்துவங்களைக் காத்து- அதன் சீரிய பண்புகளுடாக பௌத்த மக்களை வழிநடத்த வேண்டிய பௌத்த பிக்குகளில் சிலரின் நடத்தைகள் - அம்மதத்தின் கோட்பாடுகளையே சீரழித்து வருவதாக அமைந்து விடுகின்றன.

இலங்கைத்தீவில் அமைதி வேண்டும் என்ற ஆதங்கத்தோடு மக்கள் அனைவரும் காத்து நிற்கும் போது, சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் விதமாக, சிங்கள மக்களிடையே இனவாதப் பிரசாரத்தை கட்டவிழ்த்து விடுவதும், அமைதியை ஏற்படுத்த கடுமையாக முயன்றுவரும் நோர்வே நாட்டவர்களுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்துவதுமாக- பௌத்த பிக்குகள் சிலர் முன்னின்று செயற்படுவது அமைதிக்கு விரோதமானது மட்டுமல்ல, புத்த பகவானின் கோட்பாடுகளையே மலினப்படுத்துவதாக அமைந்து வருகின்றது.

ஆன்மிக, மத, நம்பிக்கையுள்ளவர்கள் கடவுள் விரும்பாத தீய செயல்களை செய்வதற்கு அஞ்சுவார்கள் எனக் கூறப்படுவதுண்டு. ஆனால், மதத்தின் பெயராலேயே பேரினவாதத்தை தூண்டுவதற்கு இவர்கள் முயற்சிப்பது பௌத்த மதத்தின் கௌரவத்திற்கே இழுக்கானதாகும்.

தமிழினத்துக்கு எதிரான விரோதச் சிந்தனைகளையும், மதம் சார்ந்த அடிப்படைவாதத்தையும் வளர்ப்பதான கருத்துக்களே இத்தகையோரால் வெளிப்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக பிக்குகள் முன்னணி என்னும் அமைப்பு- கடவுள் நம்பிக்கையை கடுமையாக எதிர்த்த, மதத்தை அபின் என விமர்சித்த கார்ல் மார்க்ஸின் மார்க்ஸியப் பாதையில் வந்தவர்களெனத் தம்மைக் கூறிக்கொள்ளும்- ஜே.வி.பி.யுடன் இரண்டாகக் கலந்து, இத்தகைய நச்சுச்செயல்களில் வெகு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

அன்பையும் அமைதியையும் அஹிம்சையும் போதித்த பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் இம் மதகுருமார் -இவை அனைத்தும் இந்த நாட்டில் உறுதியாக வேரூன்றுவதை கண்மூடித்தனமாக எதிர்ப்பதும்-

அவலத்தையும், அழிவையும் போரையும் வேண்டி- அறிக்கைகள் விடுவதும் எத்துணை முரண்பட்ட செயல்களாகவுள்ளன என்பதை அறிவார்களா?

உலகிலுள்ள அனைவரும் சமத்துவமானவர்கள் என்ற, புத்தபகவானின் வழிவந்தவர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளும் இவர்கள்- தமது சகோதர இனத்தவருககான உரிமைகளைப் பறிப்பதிலும், தடுப்பதிலும் ஆர்வம் கொண்டு செயற்படுவதை பௌத்த தர்மம் அனுமதித்து விட்டதா?

உண்மையான மகிழ்ச்சியே நிர்வாணத்தை அடையும் வழியென வாழ்ந்து காட்டியவரின், அப்பெருந்தகையின், பாதையிலிருந்து பெருந்தூரம் விலகிச் செல்லும் இத்தகைய வேடதாரிகளை -பௌத்த சமூகம் தொடந்தும் அனுமதிக்குமாயின், அது- பெருமை வாய்ந்த அம்மார்க்கத்தையே மாசுபடுத்தி விடும் என்பதை உண்மையான பௌத்தர்கள் கருதிற் கொள்ளவேண்டும்.

# நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்தால் நாட்டைவிட்டு ஓடும் நிலை ஏற்படும்

### ஜனாதிபதியை எச்சரிக்கிறார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

மக்களின் ஆதரவுடனேயே நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிக்க முடியும். இல்லையேல் எதிர்க்கட்சித் தலைவரான நான் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் நாட்டை விட்டுத் தப்பி ஓட வேண்டியநிலை ஏற்படும் என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்தையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளைப் புனரமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றிய மகிந்த ராஜபகஷ -

மக்களின் ஆதரவின்றி ஜனாதிபதியால் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாது. அவ்வாறு இல்லாமல் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதி பிரயோகிப்பாரேயானால், நான் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் அனைவரும் நாட்டைவிட்டு ஓடவேண்டியிருக்கும் என்று மேலும் தெரிவித்தார்.

### நெல்லியடிச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர்

# மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய ஆலோசனை

(நவிண்டில்)

நெல்லிடியில் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்கள், அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கினை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி கஜேந்திரகுமார், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பான சட்ட ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்.

அத்துடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைத் தாம் வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் ஆகியோர் உறுதியளித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (116)

# முஸ்லிம் காங்கிரஸ் விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது!

### ஹக்கீமிடம் ரணில் உறுதி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிப் பூசலுக்குள் அரசாங்கம் தலையீடு செய்யமாட்டாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த திங்கட்கிழமை இரவு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். இச்சந்திப்பின்போதே, முஸ்லிம் காங்கிரசினுள் ஏற்பட்டிருக்கும் உட்கட்சிப் பூசலுக்குள் அரசாங்கம் எவ்வித தலையீடும் செய்யாது என்றும், அமைச்சர் ரவூப் ஹக்கீமே அதைத்தீர்த்து கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அதாவுல்லா அணியினர் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்தும் விரிவாக ஆராயப் பட்டதாகத் தெரியவருகின்றது.

# ஏழு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் அடுத்தமாதத்தில் நியமனம்!

### சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

புதிதாக ஏழு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கவுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டதாகவும் இதில் 35 பேர் தோற்றியதாகவும் தெரிவித்த அவர்,

இவர்களில் ஏழுபேருக்கு அடுத்தமாதம் முதல் வாரத்தில் நியமனங்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, சகல பொலிஸ் அதிகாரிகளினதும் இடமாற்றங்களை இடை நிறுத்துமாறும் ஆணைக்குழு உத்தரவிட்டிருப்பதாகவும், பதவியுயர்வுகளை இடைநிறுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய மேலும் தெரிவித்தார்.

# பனந்தொழில் வல்லுநர்களின் போராட்டத்துக்கு வலி. வடக்கு வெகுஜன ஒன்றியம் ஆதரவு!

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை மீண்டும் தமது நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு கோரி பனந்தொழில் வல்லுநர்கள் நடத்திவரும் மறியற் போராட்டத்துக்கு வலிகாமம் வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

பனந்தொழில் வல்லுநர்களின் நியாயமான கோரிக்கை நிறைவு செய்யப்படவேண்டும். அவர்களின் சொத்துக்களில் ஒன்றாகிய திக்கம் வடிசாலை காலதாமதம் இன்றி விரைவாக அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

இவ்விடயத்தில் அபிவிருத்திச் சபை நியாயமாகச் செயற்படவேண்டும் என்றும், மேற்படி போராட்டத்துக்கு, என்றும் எமது ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்கும் எனவும் வலிகாமம் வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சி.சிவமகாராஜா நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# விடுமுறையில் செல்ல படையினருக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை!

### இராணுவத்தில் விரக்தி ஏற்பட்டிருப்பதாகத் தகவல்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் இராணுவத்தினர், விடுமுறைக்கு வீடுகளுக்குச் செல்வதில் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொள்வதால், மனவிரக்திக்குள்ளாகியுள்ளதாக படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பணியாற்றும் ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் போக்குவரத்து வசதிகளின்றிக் காத்திருக்கின்றனர். விடுமுறையில் செல்லும் படையினர் தற்போது லங்கா முதித்த, மேர்ஸ் கோமாரி ஆகிய இரு கப்பல்கள் மூலம் மட்டுமே அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

விமானப் படைக்குச் சொந்தமான மூன்று அன்ரனோவ் விமானங்களும், ஒரு சி-130 விமானமும் விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றியிறக்கி வந்தன. இப்போது அன்ரனோவ் விமானங்கள் இரண்டு மட்டுமே இச்சேவையில் ஈடுபடுகின்றன. சி-130 விமானம் 1000 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பறப்பில் ஈடுபட்டதால் திருத்த வேலைக்காகத் தளத்தில் தரித்திருக்கின்றது.

இந்த நெருக்கடியைத் தவிர்க்க தனியார் விமானசேவை நிறுவனமொன்றின் உதவியும் நாடப்பட்டிருக்கின்றது.

கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகை தினங்களையொட்டி விடுமுறையில் செல்லும் படையினருக்கு சரியான போக்குவரத்து வசதிகள் செய்து கொள்ளப்படாமையால் படையினர் பெரிதும் விரக்தியடைந்துள்ளனர்.

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடுகின்ற படையினரில் 30 சதவீதமானோர், விடுமுறையில் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்காமையினாலேயே தப்பி ஓடுவதாகவும் படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# சமஷ்டியும் சிங்களத் தலைமைகளும்; டி.எஸ்.சேனநாயக்க முதல் ரணில் வரை!

எஸ்.எம்.ஜி. என அழைக்கப்படும், ஈழத்துப் பத்திரிகையுலகின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரட்ணம் அறிமுகத்திற்கான அவசியமற்றவர். 'ஈழமுரசு', 'ஈழநாடு', 'ஈழநாதம்' ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர். இந்திய அமைதிப் படைக்காலத்தில் இவர் அனுபவித்த சிறை வாசம்- 'ஈழமண்ணில் ஒரு இந்தியச் சிறை' என நூல் வடிவில் வெளிவந்து பலரதும் பாராட்டைப் பெற்றது.

**பகுதி -2**

நாடாளுமன்றத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம், செ.சுந்தரலிங்கம், கம்யூனிஸ்ட் பொன.கந்தையா, இடதுசாரித் தலைவர்கள் உட்பட வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துத் தமிழ், முஸ்லிம் எம்.பிக்களும் வன்மையாக எதிர்த்து வாதாடி, ஜனநாயக முறையில் எதிர்த்து வாக்களித்தபோதிலும்

டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான முதலாவது அமைச்சரவை



பெரும்பான்மை ஜனநாயகத்தினால் அவை நிராகரிக்கப்பட்டன.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள ' ஸ்ரீ ' எழுத்துப் பொறிக்கப்பட்டது.

இப்படி சிங்களத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆளுந்தரப்பும், பேரினவாதிகளும் தீவிரப்படுத்துவதும், அதைத் தமிழ் மக்கள் தரப்பில் எதிர்ப்பதும், போராட்டமாகவே-சாத்வீகப் போராட்டமாகவே தொடர்ந்தது.

ஆளுந்தரப்பினரதும், பேரினவாதிகளினதும் தமிழ் விரோதச்செயல்களுக்கு எதிராக- செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி, காந்தீய வழியில் சாத்வீகப் போராட்டங்களை மேற் கொண்டபோதெல்லாம், ஆட்சிப் பீடத்திலிருந்தோர ஆயுதப்படைகளின் பலத்துடன், நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளை அடக்கி ஒடுக்கினர்.

1957 ஆம் ஆண்டில் மாபெரும் சாத்வீகப் போராட்டத்துக்கு தமிழரசுக்கட்சி திட்டமிட்டபோது, செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்திய பண்டாரநாயக்க ஒரு ஒப்பந்தமும் செய்தார்.

சமஷ்டிக் கோரிக்கைக்குப் பதிலாக, பிரதேச சபைகள் வடக்கிலும் கிழககிலும் அமைப்பதென்றும், கிழக்கில் அமைக்கப்படும் பிரதேச சபைகள், வடக்குப் பிரதேச சபையுடன் ஒன்றாக இணையலாம் என்று தீர்மானித்தால் ஒன்றாக இணையலாம் என்றும், இந்த ஒப்பந்தம் வகை செய்தது. கல்வி, விவசாயம், குடியேற்றம் முதலிய அதிகாரங்கள் இந்தப் பிரதேசசபைகளின் பொறுப்பில் விடுவதற்கு இந்த ஒப்பந்தம் வழிதருவதாகக் கூறியது.

ஐக்கிய தேசியக் கட்சியினர், ஜே.ஆர்.தலைமையில் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்கு யாத்திரை சென்றதாலும், ஆளும் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புத் தோன்றியதாலும், புத்த பிக்குகள் எதிர்த்துக் கிளம்பியதாலும்- பண்டாரநாயக்கா தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை தாமே கிழித்தெறிந்தார்.

இந்தப் பிரதேசசபை வழங்கப்படடால், நாடு துண்டாடப்பட்டு விடும என்று- ஜே.ஆரும், பேரினவாதிகளும் பிரசாரம் செய்தனர்.

1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் தமிழ் இனத்துக்கு எதிராக கலகம் தூண்டிவிடப்பட்டது. தென்னிலங்கையில் தமிழர்கள் உயிரையும், உடமைகளையும் இழந்து அகதிகளாயினர்.

வடக்கு- கிழக்கு, தமிழ் மக்களின் பிரதேசங்கள் அல்ல என்று பிரதேசசபைகளை எதிர்த்த பேரினவாதிகள்- இன்க்கலவரத்தை ஏற்படுததி தமிழினப்படுகொலை செய்து ஒழிக்கத்திட்டமிட்டனர். அப்போது இலங்கையில் இந்தியத் தூதராக இருந்த கண்டேவியாவும் இந்திய அரசும் எடுத்த நடவடிக்கை காரணமாக, இனக்கலவரத்தைக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வரவேண்டிய நிலை பண்டாரநாயக்க அரசிற்கு ஏற்பட்டது. இதேசமயம் அகதிகளான தமிழ் மக்கள் தங்களின் தாயகம் வடக்குக் கிழக்குப்பிரதேசம்தான் என்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக கப்பல்களில் யாழ்ப்பாணத்திற்கும், திருகோணமலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

1959 ஆம் ஆண்டு செப்டெம்பரில், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஒரு புத்தபிக்குவினால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, டாக்டர். தஹநாயக்க காபந்துப்பிரதமராக வந்தார். சுதந்திரக்கட்சி அமைச்சர்களுடன் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. சில அமைச்சர்



தஹநாயக்க

களை தஹநாயக்க பதவிநீக்கம் செய்தார். 1960 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் நாடு முழுவதும் ஒரேநாளில் வாக்களிக்க வழிகளைச் செயதார். அலரிமாளிகையில் இருந்தபடியே "லங்கா பிரஜா தள" என்ற தீவிரவாதமான அரசியல் கட்சியை தஹநாயக்க தொடங்குகிறார். பெரும்பாலானோர் தேர்தலில் வேட் பாளர்களை நியமித்தனர். தேர்தலில் அனைவரும, தஹநாயக்க உட்பட தோல்வியடைந்தனர்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம பொதுத்தேர்தலில் அஞ்ஞாதவாதத்தைத் துறந்து மீண்டும் அரசியலுக்கு வந்த டட்லி சேனநாயக்கா, ஐக்கிய தேசியக்கட்சிக்கு தலைமை தாங்கித் தேர்தலில் போட்டியிட்டார். டட்லி சேனநாயக்காவுக்கும் செல்வநாயகத்திற்கும் இடையில் இரகசிய உடன்பாடு இருப்பதாக, சுதந்திரக் கட்சி பிரசாரம் செய்தது. இலங்கையைத் துண்டுபோட்டு வடக்கையும் கிழக்கையும் தூக்கி செல்வநாயகத்திடம் டட்லி கொடுப்பதாகவே சுவரொட்டிகள் தென்னிலங்கையெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடுவதற்காகவே எனப் பிரசாரம் செய்யப்பட்டது. டட்லிக்கும் செல்வநாயகத்திற்கும் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாகத் சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் கூறிவந்தது.

இத்தேர்தலில்- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு சி.பி.டி.சில்வா, மைத்திரிபால சேனநாயக்க ஆகியோர் தலைமை தாங்கினர். பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட பின் நடந்த இப்பொதுத்தேர்தலில், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க நேரடியாக அரசியலில் இறங்கவில்லை. பின்னணியிலிருந்தே ஆலோசனை கூறிவந்தார்.

டட்லிக்கும் செல்வநாயகத்துக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில், தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளை டட்லி ஏற்றுக் கொண்டார். சி.பி.டி.சில்வா, மைத்திரிபால ஆகியோருக்கும் செல்வநாயத்துக்குமிடையில் நடந்த பேச்சுக்களில் சுதந்திரக்கட்சி எதையும் வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

மார்ச் தேர்தலின் பின், தமிழரசுக் கட்சியின் உதவியுடன் டட்லி சேனநாயக்க ஆட்சியமைத்தார். சிம்மாசனப் பிரசங்கத்தில்- அரசு ஒப்புக் கொண்டபடி தங்களுக்குள் ஏற்பட்ட உடன்பாடு பற்றி எதுவும் தெரிவிக்க டட்லி தவறிவிட்டார். முன்னரே பிரதமருக்குக் கூறியபடி சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தொிவிக்கும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்து, ஆட்சியை தமிழரசுக் கட்சி கவிழ்த்தது.

டட்லி, நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட கவர்னர் ஜெனரலுக்குப் பரிந்துரைத்தார்.

1960 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடந்தது. இத்தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க சுதந்திரக்கட்சிக்குத் தலைமை தாங்கி, நேரடியாகவே அரசியலில் இறங்கிப் பிரசாரம் செய்தார். இச்சமயத்தில், சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாகவும்- நாட்டைத் துண்டாட இருதரப்பும் ஒப்புக் கொண்டிருப்பதாகவும், யு.என்.பி பிரசாரம் செய்தது. இதேசமயம்கடைசி நேரத்தில் செல்வநாயகம் விட்ட ஒரு அறிக்கையில், எந்தச் சிங்களப் பெரும்பான்மைக்கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய பலம் கிடைப்பதற்குத் தமிழ்மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று கோரியிருந்தார். தமிழரசுக் கட்சியுடன், பெரும்பான்மை அரசியல் கட்சிகள் வரக் கூடியதாகத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென அவர் கோரியிருந்தார்.

சிங்கள மக்கள் மிகப்பெரும்பான்மைப் பலத்துடன் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக்கட்சியை ஆட்சிக்குத் தெரிவு செய்தனர்.

**எஸ்.எம்.ஜி.**

சமஷ்டி என்ற வார்த்தை, கடந்த இரு பொதுத்தேர்தல்களிலும் இருதரப்பு மேடைகளிலும் மற்றும் பிரசாரங்களிலும் நாட்டைத் துண்டாடும் பிரிவினைத்திட்டமென்றே மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட, பிரதேச சபைகள் பற்றிக் கூடச் சிந்திப்பதற்கு சிறிமா தலைமையிலான சுதந்திரக்கட்சி முன்வரவில்லை. செல்வநாயகம் தலைமையிலான சமஷ்டிக் கட்சியை, தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்வதற்கே சுதந்திரக்கட்சி தயாரீக இருக்கவில்லை. இந்நிலையில், சிறிமா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்கு, இடதுசாரிக் கட்சிகளான- லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவளிக்க முன்வந்தன. கடந்த பொதுத்தேர்தலில் ஏரிக்கரைப் பத்திரிகைகள் சிறிமாவின் சுதந்திரக் கட்சிக்கு எதிராகத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ததால், ஏரிக்கரைப் பத்திரிகைகளை அரசுடமையாக்க வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இக்கோரிக்கை, முன்னரே இருந்தபோதிலும் இடதுசாரிகள் சிறிமா அரசுக்கு ஆதரவளிக்கப் போவதாகத் தெரிவித்ததுடன் இது வலுப்பெற்றது.

சிங்கள அரசியற் கட்சிகளோடு, சிங்கள- ஆங்கிலப் பத்திரிகைகளும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிராகவே எழுதி வந்தன. சமஷ்டிக் கோரிக்கையை நாட்டைப பிரிக்கும் நடவடிக்கை என்றே சிங்கள- ஆங்கிலப் பத்திரிகைகள் தினமும் செய்திகள் வெளியிட்டு வநததுடன், கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தன. பண்டாரநாயக்கா- செல்வநாயகம். ஒப்பந்தம் பற்றி எவரும் வாய்திறக்கவே இல்லை.

(அடுத்த வியாழன் தொடரும்)

---

நேசன்

## எங்கே போகிறோம்...?

# நமது கலைஞர்கள் ... நமது படைப்பாளிகள்...

ஒரு தேசத்தின் வாழ்வோடும், வளர்ச்சியோடும், உயர்வோடும் தொடர்புபட்டவை அத்தேசத்தின் கலை இலக்கியங்கள். கால ஓட்டத்தில் தேசம் எதிர்கொள்ளும் வாழ்வியற் கோலங்கள்~ கலை இலக்கியங்களிற் பதிவாகின்றன. சிறந்தகலையும் உயர்ந்த இலக்கியங்களும் அந்தப் பணியைச் செய்யவேண்டியது கட்டாயமும் ஆகிறது.

எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் அதன் வெற்றியும் நிறைவேற்றமும் அதனைச் செய்பவரிடத்திற் காணப்படும் சிரத்தையில்தான் தங்கியிருக்கிறது. சிரத்தை மிகுந்த உழைப்பு, சிறப்பான வெற்றிக்கு உத்தரவாதம் தருகிறது.

இந்த உண்மை எந்தக்காரியத்துக்கும் பொருந்தி வரக்கூடிய ஒன்று.

தான் வரைகின்ற ஓவியம் அற்புதமாக வரவேண்டும் என்று மனசார விரும்புகிற கலைஞன், தன்னைத் தேய்த்து அந்த ஓவியத்துக்கு உயிர் தருகிறான்.

அது முழுமையுறும்போது ரசிகனது உள்ளத்தை அள்ளிப்போகிறது...

நமது மண்ணில் அத்தகைய ஓவியக் கலைஞர்கள் ஒரு சிலராவது இருக்கிறார்கள் என்னும் உண்மை மனசுக்குப் பெரிதும் ஆறுதலைத்தருகிறது.

அண்மையில் ஒரு இசை நிகழ்ச்சியைக் காண ஈழத்துச் சிதம்பரத்துக்குச் செல்ல நேரிட்டது (அது எனக்குக் கிடைத்த பேரதிர்ஷடம் என்று பின்னர் உணர்ந்தேன்). என்னை அதற்கு அழைத்துச்சென்றவர் ஒரு அருமையான மிருதங்கக் கலைஞர். தனது துறையில் உச்சத்தைத் தொட வேண்டும் என்ற பேராவலோடு உழைத்து வருபவர். கலை பற்றி - இலக்கியம் பற்றிப் பேசும்போதெல்லாம் அயரா உழைப்பு - அசுரசாதகம் பற்றியே பேசுகின்ற, சிந்திக்கின்ற ஒரு இளைய தலைமுறைக் கலைஞர் அவர். கோயிலில நிகழ்ச்சி ஆரம்பமாக முன்னர், நிகழ்ச்சியிற் கலந்து கொள்ளவிருந்த ஒரு புகழ்பூத்த, உலக நாடுகள் பலவற்றிலும் பரவலாக அறியப்பட்டுள்ள நாதஸ்வரக் கலைஞருடன் எனது நண்பர் உரையாடிய சந்தர்ப்பத்தில் அருகிலிருக்கும் பாக்கியம் கிடைத்தது.

சங்கீதத்தை ரசிப்பதைத்தவிர அது பற்றிய எந்த ஞானமும் அற்றவனாகிய நான், அவர்களின் உரையாடலின்போது அந்த மூத்தகலைஞர் எடுத்துச் சொன்ன இசைபற்றிய கருத்துக்களை - இசைகுறித்து - சங்கீதம் குறித்து அவருக்கிருந்த மேன்மையான ஈடுபாட்டை, ஆத்மார்த்தமான லயிப்பை, அதன் விளைவான அர்ப்பணிப்பு நிறைந்த உழைப்பையெல்லாம் அறியநேரிட்டது.

தான் சார்ந்திருக்கும் கலையில் புதிதாக ஒரு உருவாக்கத்தைச் செய்வதில் அவருக்கிருந்த உள்ளார்ந்த பக்தி - (அந்த உணர்வுக்கு வேறென்ன பெயரிடுவது என்று எனக்குத் தெரியவில்லை) என்னைச் சிலிர்க்க வைத்தது. தங்களது கலையில் எவ்வளவு அர்ப்பணிப்பு உடையவர்களாக இருக்கிறார்கள் இவர்கள்.

ஒரு ஆக்கம் குறித்து எத்தனை சிரத்தை. இதன் விளைவாக வெளிப்படவல்ல ஒரு புதிய விஷயம் எவ்வளவு அழகாய், அற்புதமாயிருக்கும். இதுபோலவே, நமது மண்தந்த மேன்மைமிக்க ஒரு ஓவியரை நேற்றுச் சந்திக்க நேரிட்டது. அவரிடமும் நான் கண்டது இதே அற்புதமான பண்பைத்தான்.

ஒரு படைப்பை ஆக்கும்போது அதன் பொருட்டு அவர் செலவிடுகின்ற நேரம் - உழைப்பு - சிரத்தை இதற்கெல்லாம் ஆதாரமாய் அவரிடமிருந்த அவரது படைப்புக்களைப் பார்த்தபோது வியப்பும் உயர்ந்த மதிப்புமே மேலிட்டன. - எத்தனையோ படைப்புகள், இடப்பெயர்ச்சி மற்றும் போர்க்கால அலைச்சல்களின்போது அழிந்தும் தொலைந்தும் போயின என்று அவர் குறிப்பிட்டது கேட்டு துயரமே மேலிட்டது.

இப்படியாக எத்தனை கலைச் செல்வங்களை எமது தேசம், கொடுமையில் இரையாகி இழந்துள்ளது...

எத்தனை கலைச்செல்வங்கள்...

எத்தனை படைப்புக்கள்...

எத்தனை கலை இலக்கிய சேகரிப்புகள், தேடல்கள், தேட்டங்கள்...

எமது கடந்த காலவாழ்வின் ஆவணங்களாய் எஞ்சியிருக்கக்கூடிய எத்தனை அற்புதங்களை நாம் பறிகொடுத்திருக்கிறோம்...

அழிந்தது போக தற்போது~ இசையோடு, ஓவியத்தோடு ஒப்புநோக்கும்போது இலக்கியத்துக்கான ஆழமும், சிரத்தையும், கவனிப்பும், ஓயா உழைப்பும் கொண்ட முயற்சிகள் எவ்வளவு தூரம் மேற்கொள்ளப்படுகின்றன...?

ஒரு படைப்பை உருவாக்குவது பற்றி மிகுந்த கவனிப்பும் கூர்மையான அவதானமும் கொண்டு உழைப்பவர்கள் எத்தனை பேர்? - பார்க்கப்போனால் ஒரு படைப்புப் பத்திரிகையில் வெளிவந்தால் போதுமென்றோ நூலுருப் பெற்றால் போதுமென்றோ கருதுபவர்கள்தான் நிறையப்பேர் நம் மத்தியில் இருக்கிறார்கள்.

நிறைய எழுதமுடிவதும் நிறையப் பிரசுரமாவதும் மட்டும் ஒரு படைப்பாளியை உன்னத நிலைக்குக் கொண்டு போய்விட முடியாது -பிரபலமாவது மட்டும் ஒரு படைப்பாளியின் இலக்காகவும் இருத்தலாகாது. தனது படைப்பு அமரத்துவம் பெறவேண்டும் என்று கருதுபவர்கள் மிகவும் குறைந்து விட்டார்கள். ஒரு வாழ்வின் சாட்சியாக, அந்த வாழ்க்கையின் உருவாக்கமாய் அமையும் மனிதர்களின் ~ பார்வைகள், அணுகு முறைகளின் ஒரு எடுத்துக்காட்டாக அமையவல்ல படைப்பொன்றின் பெறுமதி மிகப் பெரியது. (இங்கு நான் சொல்வது பணப் பெறுமதியை அல்ல)

'மோகமுள்' எழுதிய ஜானகிராமன் அதை ஒரு வெற்றிகரமான படைப் பாக்க எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதும், அவரது 'அம்மா வந்தாள்' மற்றும் 'மரப்பசு' போன்ற படைப்புகளின் பின்னணியில் எத்தகைய அசுர உழைப்பு இருக்கிறது என்பதும் வியப்படைய வைக்கும் உண்மைகள்.

இன்றுவரை எழுதி வருகின்ற லா.ச.ரா. என்று~ க.பொ.த.உயர்தர மாணவர்களால் இலக்கிய வரலாற்றில் ஒருவராக இருக்கிற லா.ச.ராமாமிர்தம்~ படைப்பிலக்கியம் பற்றி எத்தகைய கருத்துக்களைக் கூறுகிறார் என்பதை அறியும்போதும் - எமது படைப்பாளிகள் பற்றி மனசில் ஏமாற்றமும் கழிவிரக்கமுமே ஏற்படுகிறது.

ஓய்ந்த நேரத்தில் எழுதுகிறார்.

ஒழிந்த சமயத்தில் இலக்கியம் செய்கிறார்.

உருப்படுமா தமிழ் இலக்கியம்?

என்ற கவிஞர் விக்ரமாதித்யனின் கவிதைதான், இப்போது நினைவுக்கு வருகிறது. சிரத்தை மிகுந்த ஓயாத உழைப்பில் மனசின் வெளிச்சத்தைப் பேனாவில் கொண்டுவரும் உக்கிரமான படைப்பைச் செய்பவர்களைக் காலம் கைவிடுவதில்லை.

~ அத்தகைய அமர இலக்கியம் எம்மவர்களிடம் எப்போது சாத்தியமாகும்?

**- மீண்டும் சந்திப்போம்.**

# செய்திப் படங்கள்



வத்திக்கான் சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையை நடாத்தும் பாப்பரசர்.



சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையைத் தொடர்ந்து சிறுவர்களை பாப்பரசர் ஆசீர் வதிக்கின்றார்.



அமெரிக்காவின் பாரம்பரிய நத்தார் தாத்தா வேஜினி யாவில பிறந்த இரு குழங்தைகளைக் கையில் ஏந்தி மகிழ்வுடன் நிற்கும் காட்சி.



ஆப்கானிஸ்தானில் ஹெலிக்கொப்டர் வீபத்தில் கொல்லப்பட்ட ஜேர்மனிய இராணுவக் கப்டன் ஒருவரின் சடலம் விமானத்தில் ஏற்றப்படுவதற்காக காபூல் விமானநிலையத்திற்கு எடுத்து வரப்படும் காட்சி.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏனைய 7 ஜேர்மன் படையினரின் சடலங்கள் நத்தார் தின வைபவங்களின் பின்னர், நேற்று காபூலில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

# துன்பப்படும் மக்களுக்கு சமாதானம் கிடைக்கட்டும்

## வத்திக்கானில் பாப்பரசர் உரை

(வத்திக்கான்)

பாப்பரசர் ஜோன் போல் தனது 25ஆவது கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனையை நடாத்தியுள்ளார். வத்திக்கானில் கடந்த 25 வருடங்களாக பாப்பரசர் ஜோன் போல் கிறி ஸ்மஸ் நள்ளிரவு ஆராதனையை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

அவர் நேற்றைய நள்ளிரவு ஆராதனை உரையில், சமாதானத்தினை வலியுறுத்தி, இயேசு கிறிஸ்து பிறப்பானது சமாதானத்தின் பிறப்பின் குறியீடாகும். எனவே, உலகில் இன்று முரண்பாடுகளினால் துன்பப்படும் மக்கள் அவர்கள் எந்த இனத்தினராக இருந்தாலும் - அவர்களுக்குச் சமாதானம் கிடைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.



பாப்பரசரின் மேற படி கூற்றானது, அவர்- நேரடியாகத் தெரிவிக்காது விடினும், தற்பொழுது யுத்த அபாயத்தினை எதிர்நோக்கியிருக்கும் ஈராக் பற்றியதாகவே இருக்கும் என நம்பப்படுகிறது. இதே வேளை- அமெரிக்காவின் ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தினை நீதியற்றது என வத்திக்கான பிரதிநிதிகள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை- பெத்தலகேமில்லுள்ள இயேசுகிறிஸ்து பிறந்த இடத்திலுள்ள தேவாலயத்தின் ரோமன் கத்தோலிக்க மதகுரு, பலஸ்தீன புனித நிலம் பற்றிக் கூறுகையில்- பலஸ்தீனத்தின் எல்லைகளில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறினால்தான் உண்மையான சமாதானம் மலரும் எனக் கூறியுள்ளார்.

இயேசுவின் பிறப்பிடம் எனக் கருதப்படும் பெத்தலகேம் இஸ்ரேலிய இராணுவத்தினரால் சூழப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த இரு தினங்களாக பெத்தலகேமின் தேவாலயப்பகுதியில் இருந்து, நத்தார் காலத்தையொட்டி இஸ்ரேலிய இராணுவம் வெளியேறியபோதும், இரவு ஊரடங்குச்சட்டத்தின் மூலம் திரும்பவும் அவர்கள் தேவாலயங்களினுள் பிரவேசித்து விடுவார்கள் என நம்பப்படுகிறது.

உலகவலம்

# நடிகர் வி.கே.ராமசாமி உடல் தீயுடன் சங்கமம்

பிரபல தமிழ் சினிமா நடிகர் வி.கே.ராமசாமியின் உடல் நேற்றுக் காலை தகனம் செய்யப்பட்டது. நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த், நெப்போலியன், பிரபு, சத்யராஜ், ராதாரவி, கே. என்.காளை, கே.எஸ். செல்வராஜ், வாசு விக்ரம், முன்னாள் அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் மற்றும் ஏராளமான திரையுலக பிரமுகர்கள் நேரில் வந்து அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

வி.கே.ராமசாமியினது உடல், அவரது வீட்டிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, தியாகராஜ நகரில் உள்ள கண்ணம்மாப்பேட்டை சுடு காட்டில் தகனம செய்யப்பட்டது.

தனது 19 ஆவது வயதில் ஏ.வி. எம். தயாரித்த 'நாம் இருவர்' என்ற படம் மூலம் அறிமுகமாகிய வி.கே. ராமசாமி தொடர்ந்து பராசக்தி, ராமு, பெண், உயர்ந்த மனிதன், குடியிருந்த கோயில், பாயும்புலி, சகலகலா வல்லவன், மின்சாரக்கனவு என ஐந்து தலைமுறை நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் நடிகர் ஆக மட்டுமல்லாது மூன்று படங்களைத் தயாரித்தும் உளளார்.



காலஞ்சென்ற நடிகர் வி.கே. ராமசாமியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தும் தமிழ்த் திரையுலகத்தினர்.

## நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



**பெயர் :ஆ.கௌஷிகன்**
**முகவரி:உறணி ,**
**வல்வெட்டித்துறை.**

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



**பெயர் :ப.கோவிநாத்**
**முகவரி:இல.92 ,றக்கா றோட்,**
**சுண்டுக்குளி.**

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மகேஸ்வரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை கட்சித் தலைமையிடம் ஜெயலத் கோரிக்கை

தன் மீது அவதூறான பிரசாரங்களை மேற்கொண்டு வரும் அமைச்சர் மகேஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் செல்வாக்கு எனது பணிகளால் பாதிக்கப்பட்டு விடும் என்பதாலேயே மகேஸ்வரன் என் மீது சேறு பூசி வருகின்றார். கட்சித்தலைமை இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைதி முயற்சிகளைப் பாவித்து மில்லியன் கணக்கில் மோசடி செய்ததாக மகேஸ்வரன் குற்றஞ சாட்டியுள்ளார். இவை அரசியல் ரீதியாக, எனது பெயரைக் கெடுக்க செய்யப்படும் பிரசாரமே.

மகேஸ்வரனுக்கு எனது பதவி தேவைப்படுகின்றது. வடக்குக்கு அடிக்கடி விஜயம் செய்து, மக்களுக்கு பணி செய்வது இவருக்குப் பொறாமையாக உள்ளது. பிரதமர் என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் வரை இந்தப் பணியைக் கைவிடமாட்டேன்.

மகேஸ்வரனின் இவ்வாறான செயல், ஐ.தே.கவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறான பேச்சுக்களை இவர் நாடாளுமன்றத் தில் பேசக் கூடாது. ஜே.வி.பி. போன்ற சக்திகளுக்கு இது வாய்ப்பானதாகிவிடும் எனவும் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2002

### நேர அட்டவணை

**28.12.2002 (சனி)**

| | | | |
|---|---|---|---|
| மாங்குளம் மகாவித்தியாலயம் - | மாங்குளம் | காலை 08.30 | மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | புளியங்குளம் | மு.ப. :09.15 | மணி |
| நெடுங்கேணி மகாவித்தியாலயம் - | நெடுங்கேணி | மு.ப. :11.00 | மணி |
| ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் - | ஒட்டுசுட்டான் | மு.ப. :11.30 | மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | புதுக்குடியிருப்பு | பி.ப. :01.30 | மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | விசுவமடு | பி.ப. :02.30 | மணி |
| கிளிநொச்சி மத்திய கல்லூரி - | கிளிநொச்சி | பி.ப. :03.30 | மணி |

**29.12.2002 (ஞாயிறு)**

| | | | |
|---|---|---|---|
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | முழங்காவில் | காலை :09.00 | மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | ஆண்டான்குளம் | மு.ப. :11.00 | மணி |
| வருவாய்ப்பகுதிச் செயலகம் - | மல்லாவி | பி.ப. :04.00 | மணி |

குறிப்பு : யாழ்.மாவட்டத்தில் வதிவோருக்கான மீளளிப்பு, தை மாதம் (2003) மீளளிக்கப்படும். மீளளிக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். தற்போது வன்னியில் வதியும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தோர், தாங்கள் வதியும் வன்னிப் பகுதிகளில் மீளளிக்கப்படும் இடங்களில், கடனை மீளப் பெற்றுக்கொள்ளலாம் என நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## காய்ச்சலினால்...

வெளிப்படுகின்றது. உடலின் சில பகுதிகளில் குருதிக் கசிவுகளும (சிறு குமிழ்களாக) ஏற்படுகின்றன. உடல் வெப்பநிலை திடீர்திடீரென கூடிக் குறைகின்றது. உடலில் இருக்க வேண்டிய குருதியின் அளவு குறைவடைகிறது. சுவாசத் தொகுதி, சிறுநீரகப்பகுதிகள் பாதிப்படைந்து உயிராபத்து ஏற்படுகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களில் இவ்வாறானவர்களில் மூன்று வீதமானவர்கள் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு அனுமதிக்கப்படுபவரின் நோயை இனங்காண முடியாமையால் உரிய சிகிச்சை அளிக்க முடியாது, உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதுள்ளது.

வைத்தியசாலையில் ஆய்வு கூடத்தில் விசேட வைத்தியர்களோ, உத்தியோகத்தர்களோ, மருந்து வகைகளோ போதியளவு இல்லை. இதனால் உரிய நோயினைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்கமுடியாதுள்ளது.

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களுடைய குருதி, கொழும்புக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்பட்ட போதும், டெங்குக்கான அறிகுறிகள் இல்லையென மருத்துவ அறிக்கைகளில் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒருவகையான வைரஸ் கிருமிகளின் தாக்கம் எனவும், டெங்கு வைரஸ் வகைகளில் ஒன்றாக இருக்கலாம் எனவும் தெரிவித்த அவர்-

காய்ச்சல் பற்றிய அடிப்படைத்தரவுகள் இல்லாமையால் உரிய சிகிச்சைகளை அளிக்க முடியாது மூன்று நான்கு தினங்களில் உயிரிழப்பு ஏற்படுகின்றது எனத் தெரிவித்தார்.

அணமைக்காலமாக குடா நாட்டில் இனந்தெரியாத காய்ச்சலினால், சிலர் வைத்திய சிகிச்சையிலும் பலனின்றி மரணமடைந்து வருவது தெரிந்ததே. (ச,ரா)

# சண்டிலிப்பாய் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பகுதியில் ஓட்டோவும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். அவருடன் வந்த மகன் மயிரிழையில் உயிர்தப்பினார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற இச்சம்பத்தில், மாதகலைச் சேர்ந்த ஏ.ஞானப்பிரகாசம் (வயது 45) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார்.

ஓட்டோவுடன், மோட்டார்சைக்கிள் கொழுவுப்பட்டு விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் ஆனைப்பந்திச்சந்தியில் நடைபெற்ற விபத்தில்- மோட்டார் சைக்கிளும் உழவு இயந்திரமும் மோதிக் கொண்டன. இவ்விபத்தில் அருளானந்தம் ஜெயசீலன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்தார். இவர் மிகவும் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். (60, ச,ரா)

## புராதன...

ஏனர். கொக்காவில் பகுதியில் கற்கால நாகரிகம் இருந்துள்ளது என புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தைச் சேர்ந்த தெரனியகல தெரிவித்திருந்தார்.

புதைபொருட்படிமங்கள் மீட்கப்பட்டிருப்பதையடுத்து கொக்காவிலில் கற்கால நாகரிகம் இருந்துள்ளமை உறுதி செய்யப்படக்கூடிய நிலை உருவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (02)

## இந்திய...

கடற்படைத் தளபதி தனது இந்திய விஜயத்தின்போது இருநாட்டு கடற்படைகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஒரு இணக்கநிலை ஏற்படுத்துவது குறித்தே முக்கிய கவனம் எடுப்பார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முஸ்லிம்...

அணி) தவிசாளரும் அமைச்சருமான அதாவுல்லா தலைமையில், அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் இப்பேராளர் மாநாடு நடைபெற்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளை ஆதரிக்கின்றோம். அதற்கு ஆதரவும் வழங்குவோம், வடக்கிலிருந்து புலம் பெயர்ந்த முஸ்லிம்கள் நட்டஈட்டுடன் மீள்குடியமர நடவடிக்கை எடுப்போம் போன்ற தீர்மானங்களும் இப்பேராளர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் அதாவுல்லா அணியின் உயர்பீட உறுப்பினர்களும் தெரிவாகினர். இதன்படி தலைவராக எஸ்.சுபைர்தீன், தவிசாளராக ஏ.எல்.எம்.அதாவுல்லா, செயலாளர் நாயகமாக ஏ.எல்.எம்.ஹவ்ரத், பிரதித்தலைவர்களாக முகைதீன் அப்துல் காதர், நூர்தீன் மசூர், ரி.கே.அசூர் ஆகியோர் தெரிவாகினர். (08)

# பாதுகாப்பு வலயங்களுக்குத்...

நிலைக்குகொண்டுவரப்பட வேண்டுமென்பது இரண்டு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகும். அதை நிறைவேற்றத் தவறுவது, எதிர்காலதத்தில் நாங்கள் அடையப்போகின்ற தீர்வோ அல்லது இணக்கப்பாட்டிறகோ தடையாக தொடர்ந்தும் இருககப்போகின்றது.

போரினால் இடம்பெயர வைக்கப்பட்ட மக்கள், மீளச் சொந்த இடங்களிற்கு சென்று, வழமையான வாழ்க்கை நிலைக்கு வரவேண்டும். இதொரு உடன்படிக்கையில் அடிப்படையாகக் கூறப்பட்ட அம்சம். இதனை நிறைவேற்றாமல், போர் நிறுத்த நடைமுறைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி விட்டோமென்று கூறமுடியாது. ஆகவே, எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற எந்த மாற்றங்களிற்கும், மக்கள் மீள் குடியேற்றப்பட்டு இயல்பு நிலை ஏற்பட வேண்டும். இது அடிபபடையான விடயம்.

இதனை நிறைவேற்றும்போதே மக்கள் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை வைப்பார்கள் என்று நான கருதுகின்றேன். உயர் பாதுகாப்பு பிரதேசமென்று சொல்லப்படுவது மக்களின் பிரச்சினை.

கேள்வி:- அப்படியென்றால் உயர் பாதுகாப்பு பிரதேசம் தொடர்பில் மீண்டும் போர் தொடங்குமா?

பதில்:- போர் தொடங்குமென்பதற்கு அப்பால், முன்னெடுக்கின்ற சமாதான தர்வு முயற்சிகள் முழுமையாக வெற்றியளிக்குமோ என்ற அச்சந்தான் எங்களுக்குண்டு.

கேள்வி:- உயர் பாதுகாப்பு பிரதேசம் என்று கூறப்படுவதால் சமாதான முயற்சிகளுக்கு தடை ஏற்படுமா?

பதில்:- நிச்சயமாக, அதாவது தமிழர் தாயகப்பிரதேசத்தில் இயல்பு நிலையைக் கொண்டுவராமல், தொடர்ந்தும் மக்கள், போரினுடைய விளைவுகளால் அல்லல்பட்டுக் கொண்டும், தொடர்ந்தும் அவர்களுடைய வாழ்க்கை நிலை மோசமாகிக் கொண்டும் போவது- சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக நகர்த்துவதற்கு நிச்சயமாகத் தடையாகத் தானிருக்கும். மக்களுடைய இயல்பு நிலையும், வாழ்க்கை மேம்படுத்தலும் இந்த சமாதான முயற்சிகளின் அடித்தளம் என்பதை மீண்டும் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன். அப்படியென்றால்தான், மக்களையும் சமாதான முயற்சிகளிற்குள் உள்வாங்கிக் கொண்டு செல்ல முடியும். இங்கு ஏற்படப்போகின்ற தீர்வு- விடுதலைப்புலிகளிற்கானதல்ல, மக்களிற்கானது. அதாவது, மக்கள்- தங்களுடைய சொந்த வீடுகளில் போய் மீண்டும் குடியேறுவது மிக அடிப்படையான உரிமை.

இந்த அடிப்படையான பிரச்சினையைக் கூடத் தீர்க்கமுடியாமல் திண்டாடுகின்ற நிலைமையில் - அரசியல் தீர்வென்றால், 54 ஆண்டுகளாக போராடி கேட்கின்ற மக்களின் அபிலாஷைகளை எப்படித் தீர்ககப் போகின்றனர் என்ற கேள்வி எல்லோராலும் கேட்கப்படுகின்ற நிலமை உள்ளது.

கேள்வி: ஓராண்டு நிறைவாகிவிட்ட போர்நிறுத்தம் பற்றி?

பதில்: போர் நிறுத்தம் எம்மால் ஒழுங்குமுறையாக கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்த அமைதியான நிலமையில், மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்பட முடியாமையினால்- போர்நிறுத்தம் முழுமையான வெற்றியைத் தரவில்லையென்றே கருதுகிறேன்.

கேள்வி: தமிழீழ காவல்துறை, நீதிமன்றம் என்பனபற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது பற்றி ?

பதில்: சந்திரிகா குமாரதுங்க இடத்திற்கொரு கதையும் நேரத்திற்கொரு பேச்சையும் பேசுகின்றார். இந்த விடயம் கேலிக்கிடமானதும், நகைப்பிற்கிடமானதுமான பேச்சாகவே உள்ளது தெரிகின் றது. அவரும், அவரின் ஆலோசகர் கதிர்காமருமாக இணைந்து கூறுவதை நாம் கருத்திலெடுக்கவில்லை. காரணம் இது போனறவற்றை மக்கள் நிச்சயம் புறந்தள்ளியே வந்துள்ளனர் என்றார். (03)

## HIV/AIDS கருத்தரங்கு

TRRO / UNICEF இன் HIV/AIDS விழிப்புணர்வுக் குழுவினரால் இந்நோய் பற்றிய கருத்தரங்கொன்று நடாத்தப்படவுள்ளது.

**காலம்:** சனிக்கிழமை (28.12.2002.)
காலை 9.30 மணி

**இடம்:** TRRO கேட்போர் கூடம்
106, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

இது பற்றிய கருத்துரையினை வடமத்திய மாகாண பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் D.W.M பாலித பண்டார வழங்கவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

HIV/AIDS விழிப்புணர்வுக் குழு,
TRRO / UNICEF,
4ம் குறுக்குத்தெரு,,
யாழ்ப்பாணம்.

(071)

## மரண அறிவித்தல்

### கந்தன் கிருஸ்ணன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு சத்திய புரத்தை வதிவிடமாகவும் கொண்ட, கந்தன் கிருஸ்ணன் 25.12.2002 நேற்று (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி, கமலாதேவி, அரியமலர், மாக்கிறேட், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் வைத்திய கலாநிதி சி.அரியரத்தினம், சி.இராசரத்தினம், புஸ்பலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கோபாலு, செல்லம், சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (26.12.2002) பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பூவடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*சத்தியபுரம்,*
*உடுவில் தெற்கு.*

**தகவல் :**
**கி.நித்தியானந்தன். (மகன்)**

## உடுப்பிட்டி பல.நோ.கூ.சங்கம் (வ/து)

## வெற்றுப்பொருட்களுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் தொகையான வெற்றுச்சாக்கு, வெற்றுப்பைகளை விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| 67 கிலோ கொள்ளளவுச் சாக்கு | - 1154 தனி. |
| 50 கிலோ கொள்ளளவுச் சாக்கு | - 1889 தனி. |
| 50 கிலோ கொள்ளளவு மா பை | - 8000 தனி. |
| 50 கிலோ கொள்ளளவு அரிசி, சீனி பை | - 8480 தனி. |

சங்கத்தில் வழங்கப்படும் படிவத்தில் மேற்குறிப்பிட்டவற்றுக்கான விலைகளைக் குறித்து 02.01.2003 மு.பகல் 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் சங்கத்தில் சமர்ப்பிக்கவும், பி.பகல் 12.15.மணிக்கு கேள்விப்பத்திரம் பிரிந்து பரிசீலிக்கப்படும். பொருட்கள் தரம் 1,2,3, கழிவு என்றவாறு விலைகள் அமைவதோடு முழுப்பொருட்களுக்கும் கேள்வி கோரப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி பல.நோ.கூ.சங்கம்,
உடுப்பிட்டி.

(சி/362)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.